e குருவி

SPECIAL EDITION

தமிழ்ச் சமூக மையம் | Tamil Community Centre




# தமிழ் மரபுகளை விதைப்போம் !



Scan & Donate

tamilcentre.ca

தமிழ்ச் சமூக மையம் | Tamil Community Centre

# 100 நாட்கள் சமூக ஈடுபாடு - தீபத்தைக் கையளித்தல்



அற்புதமான 100 நாட்கள் சமூக ஈடுபாட்டுப் பயணத்தினை முடிவுக்கு கொண்டுவருகையில், இது ஒருபோதும் தனிஒருவரின் முயற்சியாக இல்லை என்பதை நான் நினைவுபடுத்துகின்றேன். இது ஒரு மாரத்தான் ஓட்டம் போன்றது, இதில் பங்கெடுக்கும் ஒவ்வொருவரும் வலுவான சமூகத்தை உருவாக்குவதில் பங்கு வகிக்கிறோம்.

மார்ச் 30, 2025 அன்று, ஸ்கார்போறோ மாநாட்டு மையத்தில் மாலை 5 மணிக்கு ஒரு சிறப்பு நிகழ்ச்சியுடன் இந்த பிரச்சாரத்தின் 100 ஆவது மற்றும் இறுதி நாளை நாங்கள் கொண்டாடப் போகிறோம்! இந்த மைல்கல் ஒரு சவாலின் முடிவை மட்டுமல்ல, இன்னும் பெரிய கூட்டு நடவடிக்கையின் தொடக்கத்தையும் குறித்து நிற்கின்றது.

**அடுத்து என்ன? இதை யார் தொடர்ந்து செயல்படுத்தப் போகிறார்கள்?**

இந்த அரும்பணி இங்கே முடிவுறாது! உண்மையான தாக்கத்தை ஏற்படுத்த, நமக்கு அதிக கைகள், அதிக குரல்கள் மற்றும் மேம்பட்ட தலைமை தேவை. இந்த நூறு நாட்களுக்கு பிறகும் இந்த இயக்கத்தைத் தொடர்ந்து நடத்த, நமது சமூகத்தில் இருந்து மேலும் 100 நபர்கள் முன்வர வேண்டும் என்று அழைக்கிறேன். யார் முன்வர தயாராக உள்ளீர்கள் ?

**மனமார்ந்த நன்றி!**

பங்கேற்று, பகிர்ந்து, ஆர்வத்துடன் பயணித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றி—உங்கள் ஆதரவு இந்தப் பிரச்சாரத்தை வெற்றிகரமாக்கியுள்ளது. இந்த உந்துதலைத் தொடர்ந்து முன்னெடுத்து, தமிழ் சமூக மையம் (TCC) அனைவருக்கும் ஒரு செழிப்பான மையமாகத் நீடிப்பதை உறுதிப்படுத்துவோம்.

மார்ச் 30 அன்று **ஸ்கார்போறோ மாநாட்டு மையத்தில்** இந்தப் பயணத்தைக் கொண்டாடவும், இந்த இயக்கத்தின் எதிர்காலத்தைப் பற்றி விவாதிக்கவும் எங்களுடன் இணைய அழைக்கின்றோம்!

அன்புடன்,

நவஜீவன் அனந்தராஜ்
Call: 416 272 8543

# 100 DAYS OF COMMUNITY ENGAGEMENT

**March 30, 2025**
5:00 PM

**Scarborough Convention Centre**

Event Registration

Play Video

Puthiya VELICHAM ekuruvi

ekuruvi தமிழ்ச் சமூக மையம் | Tamil Community Centre

**வணக்கம்**

நீண்ட இடைவெளியின் பின்னர் மீண்டும் ஈ.குருவி பத்திரிகை மூலமாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி.

சுமார் 14 வருடங்களுக்கு முன்னர் கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் நிதி சேர நடைபவனி பற்றிய பரப்புரைப் பணிக்காக ஆரம்பிக்கப்பட்டது தான் ஈ.குருவி.

கடந்த காலங்களில் காத்திரமான பல மாற்றங்களை வலியுறுத்தும் ஆக்கங்கள் மூலமாக தமிழ் மக்கள் மத்தியில் விழிப்புணர்வூட்டும் ஊடகப் பயணத்தை மேற்கொண்டிருந்தது. சமூக மாற்றங்களுக்கான அதிர்வுகளை ஏற்படுத்தியிருந்தது. பத்திரிகை பயணத்தினூடாக தாயகத்தில் புதிய வெளிச்சம் தனது செயற்பாடுகளை பரவலாக்கிக்கொண்டிருந்தது.

கொவிட் பெருந்தொற்று பரவல் காலத்தில் ஏற்பட்ட அசாதாரண நிலமைகளால் எமது வெளியீட்டை நிறுத்தும் கடினமான முடிவினை எடுக்கும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம்.

இப்போது கனேடியத் தமிழ்ச் சமூகம் மட்டுமல்ல உலகெங்கும் பரந்து வாழும் தமிழ்ச் சமூகமும் மிக முக்கியமான கால கட்டம் ஒன்றில் நின்று கொண்டிருக்கிறோம்.

தாயகத்தில் இருந்தும் தமிழகத்தில் இருந்தும் வேர் பிரிந்து வந்த மக்கள் கூட்டம் தமது மரபுகளை புலம்பெயர் தேசங்களில் தொலைத்து விடுவோமோ என்ற அபாயத்தின் மத்தியில் எமது பாரம்பரியங்களையும் மரபுகளையும் அடுத்த தலைமுறைக்கு கடத்துவதன் மூலம் தமிழ்ச் சமூகமாக நாம் உயிர்ப்புடன் இருக்க வேண்டியதன் அவசியம் உணரப்படும் காலம் இது.

இந்த பின்னணியில் கனடாவில் மூன்று நிலை அரசுகளின் பங்களிப்புடன் உருவாக்கப்படும் தமிழ்ச் சமூக மைய திட்டம் குறித்து தெளிவூட்டலை மக்கள் மத்தியில் ஏற்படுத்தவும் அதில் மக்களின் அதிகரித்த பங்களிப்பின் அவசியத்தை வலியுறுத்துவதற்குமான முயற்சியின் அவசியம் உணரப்படுவதால் வரலாற்று தேவை கருதி மீண்டும் ஈ.குருவி தனது சிறகுகளை விரிக்கின்றது.

தனிமனிதனாக நூறு நாட்கள் நூறுபேரை சந்தித்து தமிழ்ச் சமூக மையத்திற்கான ஆதரவினையும் நிதிப் பங்களிப்பினையும் கோரும் பயணத்தில் கிடைத்த அனுபவம், அவர்களின் வரவேற்பு இன்னும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களிடம் இந்த திட்டத்தை எடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தை எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

சமூக வலைத்தளங்களின் ஆதிக்கம் நிறைந்த இன்றை காலத்திலும் பத்திரிகை ஊடகம் மிகக் கனதியான மாற்றத்தை ஏற்படுத்தும் ஆற்றல் மிக்கது என்பதை நாம் உறுதியாக நம்புகின்றோம்.

மக்களிடம் தமிழ்ச் சமூக மையத் திட்டத்தை கொண்டு சேர்ப்பது அவர்களின் பங்களிப்பினை கோருவது மட்டுமல்ல இந்த திட்டம் குறித்து மக்கள் மத்தியில் உள்ள கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு பதிலளிப்பதும் காலத்தின் தேவை என நாம் கருதுகின்றோம்.

இந்த நோக்கங்களை நிறைவு செய்யும் வகையிலேயே இந்த பத்திரிகை இன்று உங்கள் கரங்களை வந்தடைந்திருக்கிறது. இந்த பத்திரிகை உங்கள் கரங்களில் பல சமூக மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கிறது. அது போலவே இந்த பத்திரிகையை இன்றும் எதிர்பார்த்து வெளியீட்டு வைப்பதில் பெருமிதம் அடைகிறோம்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ்ச் சமூக மையத்தை கட்டியெழுப்ப வேண்டும். எமக்கு கிடைத்துள்ள மிகப் பெரிய சந்தர்ப்பத்தை நாம் எக்காரணம் கொண்டும் தவறவிடக் கூடாது.

தமிழ் மீதும் அதன் எதிர்கால இருப்பின் மீதும் அக்கறை கொண்ட மக்கள் அனைவரும் தம்மாலான பங்களிப்பினை வழங்கி இந்த திட்டத்தை வெற்றிகர மானதாக மாற்ற முன்னவர வேண்டும் என்பதே எமது அன்பான கோரிக்கை!!



அன்புடன்
**நவஜீவன் அனந்தராஜ்**
இகுருவி, புதிய வெளிச்சம்
Tel: 416-272-8543
Email: ekuruvi@gmail.com

**தமிழ்ச் சமூக மையத்தினை கட்டுவதற்கு மக்கள் ஏன் பணம் கொடுக்க வேண்டும்?**
- ரமணன் சந்திரசேகரமூர்த்தி

**தமிழ்ச் சமூக மையம் கனேடியத் தமிழர்களின் பெருமையாக அமையும்**
- வேல்

**புலம்பெயரிகள் யுகத்தில் ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவது**
- நிலாந்தன்

**தமிழ்ச் சமூக மையம் என்பது காலத்தின் தேவை**
- குயின்ரஸ் துரைசிங்கம்

**சனசமூக நிலையத்திலிருந்து, சமூக நிலையம் நோக்கி**
- ரதன்

**ஒரு வட்டமும் தமிழ்ச் சமூக மையமும்**
- கனடா மூர்த்தி

**தமிழ் மொழியின் நீடித்த இருப்பில் தமிழ்ச் சமூக மையத்தின் வகிபாகம்!**
- தயந்தன் திருநாவுக்கரசு

**The Tamil Community Centre: A Global Initiative for Unity, Culture, and Empowerment**
- Rukshan Para

**The Tamil Community Centre, a thank you gift for our parents**
- Keerthana Rang

**A Community Center is a Vital Third Place**
- Quentus Thuraisingam

**Building tomorrow's Tamil legacy**
- Keerthana Rang

**Research Study: Community Centres in the Greater Toronto Area (GTA)**
- Sharan Sriskantharajah

**Why Do We Need a Tamil Community Centre in Toronto? Why Now, of All Times?**
- Tharani Ketheeswaran

**"Preserving Tamil Heritage: The Urgent Need for a Community Centre"**
- Sharmmila Rajkumar

ஆசிரியர் குழு:
**நவஜீவன் அனந்தராஜ்**
**கோபிநாத் பொன்னுத்துரை**
**சூர்யா பாலேந்திரா**
**ரமணன் சந்திரசேகரமூர்த்தி**

அட்டை வடிமைப்பு:
**சுஜீவன் யோகலிங்கம்**

பக்க வடிமைப்பு:
**விஜயரூபன் புஸ்பராசா**

AUDIO QR CODE

# தமிழ்ச் சமூக மையத்தினை கட்டுவதற்கு

# மக்கள் ஏன் பணம் கொடுக்க வேண்டும்?

தமிழ்ச் சமூக மையத்தினை கட்டுவதற்கு மக்கள் ஏன் பணம் கொடுக்க வேண்டும் என்பதே பலரிடமும் இருக்கின்ற கேள்வி.

இந்த நாட்டில் நாம் பயன்படுத்தும் மருத்துவமனைகள் முதல் பல்வேறு சமூக மையங்கள் வரை அனைத்தும் மக்களின் பங்களிப்புடன் தான் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மக்களின் அடிப்படைத் தேவையான மருத்துமனைகளே மக்களின் பங்களிப்போடு தான் உருவாக்கபட்டுள்ளதை நாம் அறிவோம்.

அங்கு பணியாற்றும் மருத்துவர்கள் தாதியர் மற்றும் ஊழியர்களுக்கும் மருந்துகளுக்கும் அரசாங்கம் நிதி உதவியினை வழங்கி வருகின்றது.

ஆனால் அதன் கட்டுமானம் திருத்தப் பணிகள் போன்றவை மக்களிடம் இருந்தும் ஏனைய நன்கொடையாளர்களிடம் இருந்தும் திரட்டப்படும் நிதி உதவியின் மூலமாகவே மேற்கொள்ளப் படுகின்றன என்ற உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இங்கு மேற்கொள்ளப்படும் பல்வேறு சமூக மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கும் அரசாங்கம் தனது பங்களிப்பை வழங்கினாலும் குறிப்பிட்ட பகுதியில் வாழும் மக்கள் அல்லது இனக் குழுமம் தமது பங்களிப்பினையும் அதற்கு இணையாக வழங்க வேண்டியது அவசியமாகிறது.

இன்று நாம் பயன்படுத்தி வரும் மாற்று சமூகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ள சமூக கலாசார மையங்கள் இதே போன்று மக்களின் பங்களிப்போடு தான் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நாம் அதிகளவான நிகழ்வுகளை நடத்தும் சீன கலாச்சார நிலையம் கட்டுமானத்திற்கு கனேடிய மத்திய அரசாங்கம் 2.8 மில்லியன் டொலர்களையும் ஒன்ராறியோ மாகாண அரசாங்கம் 2.3 மில்லியன் டொலர்களையும் வழங்கியது.



1988ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1998ம் ஆண்டில் முதல் கட்டப் பணிகள் நிறைவடைந்த போது அதன் முதல் பகுதி கட்டுமானத்திற்கான 13 மில்லியன் செலவினத்தின் மிகுதி 7.9 மில்லியன் டொலர்கள் நன்கொடை யாளர்களிடமிருந்தே சேகரிக்கப்பட்டது.

அதன் இரண்டாம் கட்டம் 7.5 மில்லியன் டொலர் செலவில் முன்னெடுக்கப்பட்ட போது மத்திய அரசாங்கம் 2.5 மில்லியன் டொலரையும் மாகாண அரசாங்கம் 2 மில்லியன் டொலரையும் வழங்கியிருந்தன.

20.5 மில்லியன் செலவில் உருவாக்கப்பட்ட சீன கலாசார நிலையத்திற்கான 9.6 மில்லியன் டொலர்கள் மத்திய மற்றும் மாகாண அரசுகளால் வழங்கப்பட்டது. மிகுதித் தொகை சமூக நன்கொடையாக சேகரிக்கப்பட்டு அந்த கட்டுமானம் மேற்கொள்ளப் பட்டது.

ஆனால் தமிழ்ச் சமூக மையத்தின் கட்டுமானத்திற்காக மத்திய அரசாங்கம் 14.3 மில்லியன் டொலர்களையும் மாகண அரசாங்கம் 11.9 மில்லியன் டொலர்களையும் நன்கொடையாக வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

அதேவேளை ரொறன்ரோ நகர சபையானது சுமார் 25 மில்லியன் டொலர் மதிப்பிலான காணியை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. இது அண்ணளவாக 30 மில்லியன் டொலர் மதிபபிடப்பட்டுள்ளது

மத்திய மற்றும் மாகாண அரசுகளின் 26.3 மில்லியன் உதவியுடன் இந்த திட்டம் உருவாக்கப்படும் போது 40 மில்லியன் டொலர் மதிப்பிலான திட்டமாகவே இது முன்மொழியப்பட்டது.

அதன் அடிப்படையில் நன்கொடை மூலமாக நாம் சுமார் 13.8 மில்லியன் டொலர்களை சேகரிக்க வேண்டிய நிலை காணப்பட்டது.

இந்த திட்டம் குறித்து தமிழ் சமூகத்தின் பல்வேறு மட்டங்களுடன் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மற்றும் கருத்தாய்வுகள் மூலமாக இந்த திட்டத்தில் முக்கியமான மாற்றங்கள் மேற்கொள்ளப் பட்டன.

குறிப்பாக எமது கலை கலாசார நிகழ்வுகளை நடத்துவதற்கான சிறப்பான நிகழ் வரங்கத்தின் தேவை பலராலும் வலியுறுத்தப்பட்டது.

> “தமிழர் சமூக மையத்திற்காக மத்திய அரசாங்கம் 14.3 மில்லியன் டொலர்களையும் மாகாண அரசாங்கம் 11.9 மில்லியன் டொலர்களையும் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.”

இதன் காரணமாக நாம் எதிர்பார்ப்பதை விட அதிகளவான நிதிப் பங்களிப்பினை நாம் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை உருவானது

மறுபுறம் கொவிட் பெருந் தொற்கு பரவல் ஏற்படுத்திய பொருளாதார மாற்றங்கள் காரணமாக கட்டுமான செலவீனங்களும் அதிகரித்தன.

தற்போது இறுதி செய்யப் பட்டுள்ள தமிழ்ச் சமூகமையத்தின் கட்டுமானத்திற்கு சுமார் 66.3 மில்லியன் டொலர்கள் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கங்கள் வழங்கும் 26.3 மில்லியன் டொலர்களுடன் நாம் மேலதிகமாக 40 மில்லியன் டொலர் நிதியினை திரட்ட வேண்டும்.

அரசாங்கங்கள் உறுதியளித்த உதவித் தொகையை நாம் பெற்றுக் கொள்வதாக இருந்தால் எமது திட்டத்தை ஒரு 2027ம் ஆண்டு மத்தியில் நிறைவு செய்ய வேண்டும்.

அதாவது நாம் 15

மில்லியன் டொலர்களை சேகரித்தால் தான் அரசாங்கம் 26.3 மில்லியன் டொலர்களை வழங்கும்.

எனவே தான் இதனை இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்த திட்மிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே திட்டமிடப்பட்டது போன்று 41.3 மில்லியன் டொலர் செலவில் பல்நோக்கு மண்டபம் நூலகம் ஆவணக் காப்பகம் மற்றும் அலுவலக அறைகள் கொண்ட சமூக மண்டபத்தை உருவாக்குதல் அதனை தொடர்ந்து இரண்டாம் கட்டமாக 25 மில்லியன் டொலர் செலவில் நிகழ்வரங்கத்தை நிர்மாணித்தல் என்பதே இந்த திட்டத்தின் எதிர்பார்ப்பு

தமிழ் சமூகமாக நாம் சுமார் 40 மில்லியன் டொலர்களை திரட்ட வேண்டும் இதன் மூலமாக மத்திய மற்றும் மாகாண அரசுகளின் 26.3 மில்லியன் டொலர் நன்கொடையினையும் ரொரன்ரோ நகர சபையின் 25 மில்லியன் பெறுமதியான நிலத்தை நீண்டகால குத்தகை அடிப்படையிலும் நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

2021ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் போது கனடாவில் 237,890 தமிழர்கள் வாழ்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் சனத்தொகை கண்கெடுப்பில் தமிழர்கள் பலரும் தமது பிரதான தொடர்பாடல் மொழியாக அல்லது வீட்டில் பயன்பாட்டு மொழியாக ஆங்கிலத்தை தெரிவு செய்தமையால் இந்த தொகை சரியானதல்ல என்ற ஒரு வாதமும் முன்வைக்கப்படுகின்றது.

கனடாவில் ஆர்மீனியர்கள் 68,855 பேர் வாழ்வதாக 2021ம் ஆண்டின் சனத் தொகை கணக்கெடுப்பு குறிப்பிடுகின்றது.அதிலும் குறிப்பாக 30,000 பேர் ரொரன்ரோவில் வாழ்கின்றார் கள். அவர்கள் தமக்கான சமூக மையத்தை நீண்ட கால நோக்கில் கட்டி அமைத்திருக் கிறார்கள்.

தமிழ் மக்களைப் போலவே மிகப் பெரும் இன அழிப்பினை எதிர்கொண்ட ஆர்மீனியர்கள் கனடா போன்ற நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரினார்கள் ஆனால் தமது வேர்களை தொலைத்துவிடாமல் இருப்பதற்காக அவர்கள் தமக்கான சமூக மையத்தை உருவாக்கி தமது தாயகத்தில் வாழும் மக்களுக்கு மிகப் பெரும் உதவிகளை தொடர்ச்சியாக வழங்கி வருகின்றார்கள்.

கனடாவில் தமது சமூகம் பாரம்பரியங்களையும் பண்பாடுகளையும் தொடர்ந்து பேண வேண்டும் என்பதற்காகவும் தமது தாய் நாட்டுடனான உறவுகளை கனடாவில் வேர்கொள்ளும் அடுத்த தலைமுறை தொடர வேண்டும் என்பதற்காகவும் ஆர்மீனியச் சமூக மையம் உருவாக்கப்பட்டது.

> **தமிழ் மக்களைப் போலவே மிகப் பெரும் இன அழிப்பினை எதிர்கொண்ட ஆர்மீனியர்கள், தமக்கான சமூக மையத்தை உருவாக்கி, தமது தாய் நாட்டுடனான உறவுகளை கனடாவில் வேர்கொள்ளும் அடுத்த தலைமுறை தொடர வேண்டும் என்பதற்காக தொடர்ந்து செயல்படுகின்றார்கள்.**

இதேபோன்ற நிலை தான் சீன கலாசார நிலையம், ஜப்பானிய கலாசார நிலையம், யூதச் சமூக மையம் என கனடாவில் காணப்படும் இனக் குழுமங்களுக்கான சமூக மையங்களின் தோற்றத்தின் பின்னணியில் இருக்கின்றன.

கனடா ஒரு பல்கலாசார நாடு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்களும் எம்மைப் போன்ற நாடற்ற தேசிய இன குழுமங்களும் இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

தமிழர்களைப் பொறுத்த வரை ஆசியக் கண்டத்திற்கு வெளியில் மிக அதிக எண்ணிக்கையானவர் வாழும் நாடாக கனடா விளங்குகின்றது.

மூன்று தசாப்தங்களுக்கு முன்பாக ஆரம்பித்த கனடா நோக்கிய புலம்பெயர்வு படிப்படியாக அதிகரித்து சுமார் மூன்று இலட்சம் தமிழர்கள் கொண்ட ஒரு முக்கிய சமூகமாக எங்களை மாற்றியிருக்கின்றது.

எமது சமூகத்தின் வளர்ச்சியின் அடையாளமாக பல தொழில் முனைவோரை கல்வியாளர்களை வர்த்தக பிரமுகர்களை அரசியல்வாதிகளை நாம் கொண்டிருக்கின்றோம்.

இங்கு பிறந்து வளரும் அடுத்த தலைமுறையினரின் அடையாளம் என்ன என்பது தான் தற்போதுள்ள தலைமுறையிடம் உள்ள மிக முக்கியமான கேள்வி.

எமது அடுத்தடுத்த தலைமுறை தங்களை தமிழக் கனேடியர்களாக அடையாளப்படுத்தப் போகின்றார்களா அல்லது கனேடியர்களாக வரையறுக்கப் போகின்றார்களா என்ற போராட்டம் காணப்படுகின்றது.

ஏற்கனவே 19ம் நூற்றாண்டில் பிரித்தானிய ஆட்சியாளர்களால் கரீபியன் நாடுகளுக்கு கொண்டு வரப்பட்ட பல இலட்சக்கணக்கான தமிழர்கள் இன்று தமது தமிழ் அடையாளங்களை தொலைத்துள்ளனர்.

அவர்களின் மூதாதையர்கள் தமிழர்களாக இருந்த போதிலும் இப்போது அவர்கள் தங்களை தமிழர்களாக அடையாளப்படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

கரும்புத் தோட்டங்களில் பணியாற்றுவதற்கு தொழிலாளர்களாக அழைத்து வரப்பட்ட கூலித் தொழிலாளர்கள் தமது வாழ்வினையும் இருப்பினையும் மட்டுமே கவனத்தில் கொள்ள வேண்டிய நிலையில் அதனை தாண்டி தமது மரபுகளையும் தொன்மையினையும் பற்றிப் பிடிக்க முடியாத நிலையில் வாழ்ந்திருந்தார்கள் என்பதையும் அதனால் அவர்கள் தமது தமிழ் அடையாளத்தை தொலைத்து விட்டார்கள் என்பதையும் நாம் புரிந்து கொள்ள முடியும்.

இங்கு பிறந்து வளரும் அடுத்த தலைமுறைத் தமிழர்களுக்கு தாயகத்துடனான உறவைப் பேணுவதற்கு ஒரு சிறந்த வாய்ப்பினை தமிழ்ச் சமூக மையத்தால் ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

எமது பாரம்பரியங்கள் பண்பாடுகள் தொன்மைகள் தொடரமால் அவற்றை புரிந்து கொள்ளும் புதிய தலைமுறைகள் உருவாக்குவதற்கு தமிழ்ச் சமூக மையம் இன்றியமையாதது.

இந்த பின்னணிகளை புரிந்து கொண்டால் நாம் ஏன் எமது பங்களிப்பினை வழங்க வேண்டும் என்பதை தெளிவாக உணர முடியும்.

இது ஒரு சிலரால் மட்டும் சாத்தியமாக்க படக் கூடிய ஒரு திட்டமல்ல என்பதையும் நாம் விரைவாக நகர வேண்டிய நெருக்கடி நிலையில் நின்று கொண்டிருக்கிறோம் என்பதையும் தெளிவாக நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த திட்டத்தின் அவசியத்தை உணர்ந்தவர்கள் பலர் தமது நெருக்கடிகளை தாண்டியும் இதில் தங்களை இணைத்து வருவது ஒரு சமூகமாக நாம் வெற்றி பெறுவதை எடுத்துக் காட்டுகின்றது.

இப்போது இருக்கின்ற பொருளாதார நெருக்கடியினை காரணமாக கொண்டு நாம் எமது கடமையில் இருந்து ஒதுங்கிவிடக் கூடாது.

நாம் அனைவரும் ஒன்றாகி எழுந்தால் மட்டுமே இதனை சாத்தியமாக்க முடியும்.

சில வேளைகளில் உங்களால் தனிப்பட்ட முறையில் இந்த தொகையினை வழங்க முடியாவிட்டால் உங்கள் சகோதரர்களை ஏனைய உறவினர்களை அணுகி அவர்களுக்கு இதனை தெளிவுபடுத்தி அவர்களுடன் இணைந்து ஒரு கூட்டுப் பங்களிப்பினை வழங்கலாம்.

நீங்கள் பணியாற்றும் இடங்களில் உங்கள் சக

> **“இங்கு பிறந்து வளரும் அடுத்த தலைமுறையினர் தங்களை தமிழ்க் கனேடியர்களாக அடையாளப்படுத்தப் போகின்றார்களா அல்லது கனேடியர்களாக வரையறுக்கப் போகின்றார்களா?”**

பணியாளர்களோடு அல்லது நண்பர்களோடு இது குறித்த உரையாடல்களை பரவலாக்குவதன் மூலம் அவர்கள் மத்தியிலான கவனஈர்ப்பினையும் பங்களிக்கும் ஆர்வத்தையும் அதிகரிக்கலாம்.

குழந்தைகளுக்கு இந்த திட்டம் குறித்து எடுத்துக் கூறுவதன் மூலம் அவர்கள் தமது பாடசாலைச் சூழலில் சக நண்பர்களுக்கு இந்த திட்டத்தின் அவசியம் குறித்த கரிசனைகளை ஏற்படுத்த முயற்சிக்கலாம்.

உண்மையில் 10,000 டொலர்கள் நன்கொடை வழங்ககக் கூடிய குடும்பங்கள் 10,000 ஐ விட அதிகமாக எம்மத்தியில் உள்ளார்கள் ஆனால் அவர்களை அணுகி அவர்களுக்கு இதன் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவது தான் மிகச் சவால் மிக்கது.

எனவே தான் இந்த பத்திரிகையினை வாசிக்கின்ற ஒவ்வொருவரும் உங்களுக்கு தெரிந்தவர்களுக்கு இந்த திட்டம் குறித்தும் இதன் அவசியம் மற்றும் கால எல்லை குறித்தும் தெளிவு படுத்துவதன் மூலம் அவர்களை பங்காளர்களாக மாற்ற முன்வர வேண்டும்.

எமது சமூகத்தின் எதிர்காலத்திற்காக எமது மொழியனதும் பண்பாட்டினதும் நிலைத்திருத்தலுருக்கான மிக முக்கியமான முன்னெடுப்பு என்பதால் அனைவரும் தங்கள் முழுமையான பங்களிப்பினை வழங்க வேண்டியது அவசியம்

### குடும்ப நன்கொடை

ஒரு குடும்பம் தனியாக 10,000 டொலர்களை வழங்க முடியா விட்டால் கூட்டாக வும் வழங்கலாம் சகோதர்கள் சகோதரிகளாக இணைந்து அல்லது நண்பர்கள் இணைந் தும் கூட இந்த பங்களிப்பினை வழங்க முடியும்.

மாதா மாதமாக அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையாக அல்லது வருடத்தில் இரண்டு மூன்று நான்கு தடவைகள் என உங்கள் வசதிக்கு ஏற்ற வகையில் இதனை பகுதி பகுதியாக வழங்க முடியும்.

இந்த திட்டத்தில் பங்களிப்பு வழங்கும் ஒவ்வொரு குடும்பத்தின் பெயரும் தமிழ்ச் சமூக மையத்தில் உருவாக்கப்படும் நன்கொடையாளர் மதிப்பளிப்பு பகுதியில் இடம்பெறும். இது காலம் கடந்தும் உங்கள் பங்களிப்பினை பெருமையோடு நினைவு கூறுவதற்கு வாய்ப்பினை உங்களுக்கு வழங்கும். கனடாவில் உருவாகும் தமிழ்ச் சமூக மையத்தில் எனது குடும்பத்தின் பங்கும் இடம்பெற்றுள்ளது என்பதை உங்கள் அடுத்த தலைமுறை குழந்தைகள் பெருமையுடன் கொண்டாடும்.

தமிழ்ச் சமூக மையம் என்பது அறக்கொடை நிறுவனம் என்பதால் இதற்கு நீங்கள் வழங்கும் நன்கொடைகள் உங்களுக்கான வரிவிலக்கினைப் பெறுவதற்கான வாய்ப்பினை வழங்கும்.



ரமணன் சந்திரசேகரமூர்த்தி

---

**கனடாவில் மட்டுமன்றி தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் பல்வேறு நாடுகளிலும் தமிழ் மக்களின் கூட்டுப் பங்களிப்பில் உருவாக்கப்பட்ட அமைப்புகள், வர்த்தக நிலையங்கள், ஊடகங்கள் போன்றவை தனிநபகர்களினால் அல்லது குறிப்பிட்ட சில அமைப்பினால் கையகப்படுத்தப்பட்டமை குறித்த குற்றச்சாட்டுகளும் விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன. அதே போன்ற நிலை தமிழ்ச் சமூகமையத்திற்கு ஏற்படாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?**

துரதிஸ்டவசமாக கடந்த காலத்தின் இதுபோன்ற கசப்பான அனுபவங்கள் தான் பலரும் இந்த திட்டத்தில் தம்மை ஈடுபடுத்துவதற்கு தயக்கம் காட்டும் நிலையை தோற்றுவித்துள்ளது என்தை நாம் நன்கு அறிவோம்.

கடந்த காலம் தந்து நிற்கும் இது போன்ற ஏமாற்றமளிக்கும் அனுபவங்களால் நாம் பல முன்னேற்றகரமான முயற்சிகளை முன்னெடுக்க முடியாத துரப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டு கிடக்கின்றோம்.

எனினும் கடந்த காலங்கின் இருந்து நாம் கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் அது போன்ற அசம்பாவிதங்கள் நிகழலாமல் தடுப்பதற்கான முன்னாயத்தங்கள் பலவற்றையும் தமிழ்ச் சமூகமையத்தின் சட்ட ஆலோசனைக் குழு முன்னெடுத்துள்ளது.

வலுவான சட்டத்தின் ஆட்சியினை நிலைநாட்டுவதற்கு கனடாவின் முன்னணி சட்ட நிறுவனத்தின் உதவியுடன் எமது சட்ட மூலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அங்கத்தவர்கள் தெரிவு பணிப்பாளர் சபை தெரிவு முதல் கட்டுமானத்திற்கான பங்களார்களை தெரிவு செய்வது வரை பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் கொண்ட சட்டக் கோவை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

தனி நபர்களோ அல்லது குறிப்பிட்ட ஒரு குழுவினரோ எதிர்காலத்தில் தமிழ்ச் சமூகமையத்தை தமதாக்க முடியாதவாறான சட்ட ஏற்பாடுகள் வலுவாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்ச் சமூகமையமானது பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளை நிறுவனமாக உள்ளதால் அதன் வெளிப்படைத்தனமை மற்றும் பொறுப்புக் கூறல் செயல்பாடுகள் மிகவும் உன்னிப்பாக அவதானிக்கப்படும் என்பதோடு அரசாங்கத்தின் தொடர்ச்சியான பங்களிப்பும் இதன் செயல்பாடுகளில் இடம்பெறும்.

அது தவிரவும் தமிழ்ச் சமூகமையம் உருவாகும் இடம் ரொரான்ரோ நகர சபைக் குச் சொந்தமானது என்ப தும் இந்த திட்டத்தின் பிர தான பங்காளர்களாக கனேடிய மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண அரசாங்கம் இணைந்திருப்பதும் மிக முக்கியமாக நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள்.

தமிழ் மக்களின் பங்குபற்றுதலுடன் தமிழ்ச் சமூகமையம் என்ற பெயர் தாங்கி இது உருவாக்கப்படுகின்ற போதிலும் சுமார் 25 மில்லியன் டொலர் பெறுமதி யான நிலம் நகரசபைக்குச் சொந்த மானது அத்துடன் கட்டுமானத்திற்கான செலவீனத்தில் 26.3 மில்லியன் டொலர்கள் அரசாங்கத்தினால் நன்கொடையளிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை எதிர்பாலத்தில் எதமிழ்ச் சமூகமையத்தின் மூலமாக பல்வேறு செயல் திட்டங்களில் மூன்று நிலை அரசகளின் நேரடிப் பங்களிப்பு இடம்பெறும்.

இவ்வாறான நிலையில் கடந்த காலத்தில் ஏற்பட்டது போன்ற கசப்பான அனுபவங்கள் அல்லது தவறான முடிவுகள் தமிழ்ச் சமூக மையத்தில் இடமபெறாது என்பதை நாம் உறுதியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

AUDIO QR CODE

# "தமிழ்ச் சமூகமையம்" கனேடியத் தமிழர்களின் பெருமையாக அமையும்

முதலாம் தலைமுறைக் கனடியத் தமிழர்கள் தமது சமூகத்தை மேம்படுத்திய அதே நேரம் கனேடிய நாட்டிற்கும் பெரும் பங்களித்து, முழுவிசுவாசத் துடன் தமது கடும் உழைப்பைப் பலவழிகளிலும் வழங்கியிருந்தனர். பல வல்லரசுகளின் சதி வலைகளையும் மீறித் தமிழ் மக்களின் இறைமை காக்கத் தமிழீழத்திற்காகப் போராடிய தலைமுறையினரின் ஒரு பகுதியினரே, போரின் வடுக்களுடன் புலம் பெயர்ந்த கனேடியத் தமிழர்கள். 2009 இல் பாரிய தமிழின அழிப்பைத் தமிழீழம் சந்தித்த பின்னர், தொடரும் தமிழர்களின் நீதிக்கான பயணத்தில் கனடியத் தமிழர்களும் பெரும் பங்காற்றி வருகின்றனர்.

தமிழர்களின் அடையாளங்கள் சிறிலங்கா இனவாத அரசினால் தொடர்ந்தும் அழிக்கப்பட்டு வருவதை உணர்ந்த புலம்பெயர் தமிழர் கள், தமது அடையாளங் களைப் புலம் பெயர் மண்ணில் பாதுகாக்கும் முனைப்பில் ஓர்மத்துடன் செயலாற்றுவது, பாராட்டத்தக்கதே.

தமிழர்கள் சிறிலங்காவின் தமிழின அழிப்பில் இருந்து தப்பி, ஏதிலிகளாகக் கனடாவிற்கு வரத் தொடங்கி ஐம்பது வருடங்கள் ஆகிவிட்டது.

பொருளாதார அரசியல் ரீதியாகத் தம்மைச் செழுமைப் படுத்திக்கொண்ட கனடியத் தமிழர்கள், தாயகதில் வாழும் உறவுகளுக்கு உதவியவண்ணம், அவர்களின் நீதிக்கான குரலாகத் தொடர்ந்தும் ஒற்றுமையுடன் செய்லாற்றி வருகிறார்கள். கனடாவின் பல பகுதிகளிலும் வாழ்ந்தாலும், GTA என்று அழைக்கப்படும்



**"இதன் தொடர்ச்சியாகவே, தற்போது அமையவிருக்கும் "தமிழ்ச் சமூகமையம்", எதிர்காலச் சந்ததியினருக்கான ஒரு பெரும்தளமாகவும் அவர்களின் ஒரு முக்கிய அடையாளமாகவும் திகழப்போகின்றது."**

ரொரோண்டோ பெருநகரில் பெருமளவிலான தமிழர்கள் வாழ்கிறார்கள். கல்வி, வணிகம் என்று தாம் தேர்ந்தெடுத்த பாதையில் மிகவும் முன்னேறிய சமூகமாகக் கனடியத் தமிழர்கள் இருப்பதுவும், கனடிய மண்ணில் அவர்களின் கடினமான உழைப்பினாலும், தமிழர்களுக்கான அங்கீகாரத்தினைக் கனடிய அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது.

"தமிழ் மரபுத்திங்கள்", "தமிழின அழிப்பு நினைவு நாள்", "தமிழின அழிப்பு நினைவுக் கல்வி வாரம்" போன்ற சட்டங்கள் மற்றும் பிரேரணைகளை நிறைவேற்றிக் கனடியத் தமிழர்களுக் கான அங்கீகாரங்களைக் கனடிய அரசு முறையாகச் செயல்படுத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாகவே, தற்போது அமையவிருக்கும் "தமிழ்ச் சமூகமையம்", எதிர் காலச் சந்ததியினருக்கான ஒரு பெரும்தளமாகவும் அவர்களின் ஒரு முக்கிய அடையாளமாகவும் திகழப்போகின்றது.

இந்த வருடம் (2025) பிராம்டன் நகரில் அமையவிருக்கும் தமிழின அழிப்பு நினைவுத் தூபியும் டொரோண்டோவில் இனி அமைய இருக்கும் சமூக மையமும் கனடிய தமிழர்களின் வரலாற்றுப் பயணத்தில் மிக முக்கிய

**"இந்த வருடம் (2025) பிராம்டன் நகரில் அமையவிருக்கும் தமிழின அழிப்பு நினைவுத் தூபியும் டொரோண்டோவில் இனி அமைய இருக்கும் சமூக மையமும் கனடிய தமிழர்களின் வரலாற்றுப் பயணத்தில் மிக முக்கிய அடிக்கற்கள்."**

அடிக்கற்கள். ஐம்பது மில்லியன் கனடிய டொலர்களுக்கு மேலான செலவுடன் கட்டப்படவிருக்கும் கனடிய சமூக மையத்தில்

தமிழ், தமிழீழ வரலாறு மற்றும் தமிழின அழிப்பின் ஆதாரங்களின் காட்சிப்படுத்தல், தமிழர் பண்பாட்டு அரங்கம், மற்றும் எல்லா கனேடியர்களும் பயன்படுத்த கூடிய பொழுதுபோக்கு அம்சங்கள் என்று பல்வேறுபட்ட பயன்பாடுகளைக் கொண்டிருக்கப் போகின்றது. 75மூ ற்கு மேலான கனடிய மாகாண மற்றும் கூட்டு அரசு நிதி ஆதரவில் அமையவிருக்கும் தமிழ்ச் சமூகமையம் கனேடிய தமிழர்கள் மட்டுமன்றி உலகெங்கும் பறந்து வாழும் புலம் பெயர் தமிழர்களுக்கும் எதிர்காலத் தில் ஒரு இணைப்பு பாலமாக வும் விளங்கும். இந்தப் பாரிய பணி விரைவில் நிறைவு பெறத் தமிழர்கள் தமது பங்களிப்பை வழங்குவது ஒரு வரலாற்றுத் தேவை.



வேல்

# புலம் பெயரிகளின் யுகத்தில் ஒரு தேசத்தை கட்டியெழுப்புவது

AUDIO QR CODE

“முதலாவது தலைமுறைப் புலம் பெயரிகளிடம் நிலம் அதாவது தாயகத்தைப் பற்றிய நினைவு உண்டு. தாய் மொழியாக தமிழ் உண்டு. தமிழ்ப் பண்பாடு உண்டு. ஆனால் இரண்டாம் தலைமுறைப் புலம் பெயரிகளுக்கு நிலம் வேறு, மொழியும் வேறு, பண்பாடும் வேறு. புலம் பெயர்ந்த தமிழர்கள் தாயகத்துக்கு வெளியே தங்களை ஒரு சமூகமாகத் கட்டிக்காக்க முயற்சிக்கிறார்கள்.”



கனடாவில் வசிக்கும் கவிஞர் சேரன் தன் கவிதை ஒன்றில் எழுதியதுபோல, முதலாவது தலைமுறைப் புலம் பெயரிகளிடம் நிலம் அதாவது தாயகத்தைப் பற்றிய நினைவு உண்டு. தாய் மொழியாக தமிழ் உண்டு.தமிழ்ப் பண்பாடு உண்டு.

ஆனால் இரண்டாம் தலைமுறைப் புலம் பெயரிகளுக்கு அதாவது கனடாவில் பிறந்து வளரும் பிள்ளைக்கு தாயகம் அதாவது நிலம் வேறு. மொழியும் வீட்டில் ஒரு மொழி சமூகத்தில் வேறொரு மொழி. பண்பாடும் அப்படித்தான். வீட்டில் ஒரு பண்பாடு வீட்டுக்கு வெளியே மற்றொரு பண்பாடு.தலைமுறைகள் தோறும் அவ்வாறு மொழி இழக்கப்படும் பண்பாடு இழக்கப்படும் நிலத்தைப் பற்றிய நினைவுகளும் மங்கிக்கொண்டு செல்லும் என்ற பொருள்பட சேரன் எழுதுகிறார்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் முதலாம் தலைமுறைப் புலம் பெயரிகளை நான் ஈருடக வாசிகள் ““அம்பிபியன்ஸ்” என்று அழைப்பதுண்டு. ஏனென்றால் அவர்கள் தாயகத்துக்கும் புலம் பெயர்ந்து வந்த நாட்டுக்கும் இடையே ஈருடகமாகக் கிழி படும் ஒரு தலைமுறை.புலம் பெயர்ந்த நாட்டில் “செற்றில்ட்” ஆன பின்னும் தாயகத்தை நோக்கி பிரிவேக்கத்தோடு தவிக்கும் ஒரு தலைமுறை. குறிப்பாக, தாயகம் தொடர்பான தமது நினைவுகளுக்கும் தமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்கும் இடையே ஈருடாகமாகக் கிழிபடும் ஒரு தலைமுறை.

அதிலும் குறிப்பாக வயது செல்லச் செல்ல தனது வேர்களை நோக்கிய தவிப்பும் அதேசமயம் புலம்பெயர்ந்த நாட்டில் அவர்கள் அனுபவிக்கும் வசதி, பாதுகாப்பு, குறிப்பாக மருத்துவம் சார்ந்த பாதுகாப்பு போன்றவற்றை விட்டு வர முடியாத தவிப்பும் என்று இரண்டு தவிப்புக்களுக்கு இடையே அவர்கள் கிழிபடுகிறார்கள்.

ஆனால் இந்த அவஸ்தை அல்லது துயரம் அல்லது தவிப்பு அல்லது ஒருவித “அண் செற்றில்ட்“ ஆன மனோநிலை அல்லது வேர் கொள்ளாத மனோநிலை என்பது இரண்டாவது தலைமுறைக்கு அல்லது அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு அநேகமாக இல்லை.

அவ்வாறு தனது இனம் சார்ந்த பண்பாடு சார்ந்த வேரிலிருந்து படிப்படியாக விலகிச் செல்கின்ற அல்லது தூரமாகிச் செல்கின்ற அடுத்தடுத்த தலைமுறையை எப்படித் தாயகத்தை நோக்கி ஈர்த்து வைத்திருப்பது என்று தவிக்கும் முதலாம் தலைமுறையானது புலம்பெயர்ந்த நாடுகளில் ஒரு சமூகமாகக் கூடக் கிடைக்கும் எல்லா சந்தர்ப்பங்களையும் உச்சமாகப் பயன்படுத்த முயற்சிக்கும். குறிப்பாக நல்ல நாட்கள் பெருநாட்கள்,சுப காரியங்கள், அபகாரியங்கள், விழாக்கள்,ஒன்றுகூடல்கள் என்று கிடைக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களையும் ஒன்றுவிடாமல் பயன்படுத்தும். தாயகத்துக்கு வெளியே தன்னை ஒரு சமூகமாகத் கட்டிக்காக்க முயற்சிக்கும்.

எனது ஐரோப்பிய, அமெரிக்கப் பயணங்களின்போது அதை நான் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் அவதானித்துள்ளேன். அவர்களில் அநேகமானவர்களின் வீடுகளில் தமிழ்ச் சுவை தலைமுறைகள் தோறும் கடத்தப்படுகிறது. குறிப்பாக உறைப்புச் சுவை தலைமுறைகள் தோறும் கடத்தப்படுகிறது. பெரும்பாலான வீடுகளில் மிளகாய்த் தூள் உண்டு. சுவை என்பது ஒரு மக்கள் கூட்டத்தின் பண்பாட்டுத் தனித்துவங்களில் ஒன்று. இந்த அடிப்படையில் கூறின், புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் உறைப்புச் சுவையை தலைமுறைகள் தோறும் கடத்த முயற்சிக்கின்றார்கள். அதில் ஒரு பண்பாட்டுத் தொடர்ச்சி மரபுரிமை தொடர்ச்சி பேணப்படுகிறது.

அதுபோலவே இரண்டாம் தலைமுறைப் புலம்பெயரிகள் வளரத் தொடங்க அவர்களைத் தமது பாரம்பரியக் கலைகளை நோக்கி முதலாந் தலைமுறைப் புலம் பெயரிகள் ஊக்குவிக்கிறார்கள்.தமிழ் டயஸ்பொராவில் தொடக்கத்தில் இருந்தே காணப்பட்ட ஒரு போக்கு இது. இதனால், பல நடன ஆசிரியைகள் அங்கே நிதி ரீதியாக எழுச்சி பெற்றார்கள். தமிழ் மொழி, நடனம், சங்கீதம் ஆகிய துறைகளை நோக்கி தமது அடுத்த தலைமுறைகளை ஊக்குவிக்கும் பல தமிழ்ப் பெற்றோர் அங்கு உண்டு.அதாவது நாட்டுக்கு வெளியே தங்களை ஒரு பண்பாட்டுச் சமூகமாக கட்டியெழுப்பும் விடயத்தில் தமிழ் டயாஸ்பொராவானது தொடக்கத்திலிருந்து சமூக அரசியல் பண்பாட்டுப் பிரக்ஞையோடு காணப்பட்டது.

தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் எனது பயணங்களில்போது நான் கண்டு ரசித்த ஒரு விடயம் உண்டு. அங்கெல்லாம் ஒரு சமூகமாகக் கூடக் கிடைக்கும் பெரும்பாலான சந்தர்ப்பங்களை அவர்கள் அதிகம் ஆர்வத்தோடு பயன்படுத்துகிறார்கள். நாட்டுக்கு வெளியே ஒரு சமூகமாகத் திரள்வதற்கு அவர்களுக்கு கிடைக்கும் எல்லா சந்தர்ப்பங்களையும் அவர்கள் பயன்படுத்துகிறார்கள். அது மட்டுமல்ல அந்த ஒன்றுகூடல்களில் அதிகம் உயிர்ப்பிருக்கும்.

ஆனால் தாயகத்தில் ஒப்பீட்டளவில் அவ்வாறு இல்லை. கல்யாண மண்டபக் கலாச்சாரம் பரவிவரும் வரும் ஒரு சமூகப் பொருளாதாரப் பின்னணியில் தாயகத்தில் கல்யாண மண்டபங்களில் நிகழும் சமூக ஒன்றுகூடல்கள் அதிகம் சடங்கார்த்தமானவைகளாக மாறி வருகின்றன. நிகழ்வில் முகூர்த்த நேரத்தில் கலந்து கொள்வதுவரிசையாக நின்று மணமக்களை ஆசீர்வதிப்பது படம் எடுப்பது சாப்பிடுவது பின்னர் கலைந்து செல்வது - எல்லாமே சடங்காகி வருகின்றன. ஆனால் புலம் பெயர்ந்த பரப்பில் ஒப்பீட்டளவில் அந்த ஒன்று கூடல்களில் அதிகம் உயிர்ப்பிருக்கும்.

**தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் ஒரு சமூகமாக திரள்வதற்கு கிடைக்கும் எல்லா சந்தர்ப்பங்களையும் பயன்படுத்துகிறார்கள். புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்களுடைய இளமைக் காலத்தில் கவர்ந்த கலை நிகழ்ச்சிகளை மீளுருவாக்கி அரங்கேற்றுவார்கள். தாயகத்துக்கு வெளியே தம்மை ஒரு பண்பாட்டுச் சமூகமாக கட்டிக் காக்கும் விடயத்தில் தமிழ் டயஸ்பெராவை பொறுத்தவரை யுத்தம் ஒரு முக்கிய பங்கை வகித்தது. மனித குல வரலாறு என்பது புலப்பெயர்ந்த சமூகக் கூட்டங்களின் வரலாறுதான்.**

அவ்வாறான ஒன்றுகூடல்களில் புலம்பெயர்ந்த தமிழர்கள் தாயகத்தில் தங்களுடைய இளமைக் காலத்தில் தங்களைக் கவர்ந்த கலை நிகழ்ச்சிகளை எல்லாம் மீளுருவாக்கி அரங்கேற்றுவார்கள். நாட்டில் நாங்கள் மறந்து போன அல்லது வழக்கொழிந்து போன அல்லது போரால் அள்ளிச் செல்லப்பட்ட பல கலை நிகழ்ச்சிகளை மீண்டும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் நான் பார்த்திருக்கிறேன். சில விமர்சகர்கள் கூறுவதுபோல அது தங்களுடைய இறந்த காலத்தை அப்படியே "ஊறுகாய் போட்டு வைத்திருக்கும்" ஒரு பண்பாகக்கூட இருக்கலாம். ஆனாலும் அங்கே ஒரு மரபுரிமைத் தொடர்ச்சியை, பண்பாட்டுத் தொடர்ச்சியைப் பேண விளையும் தேசிய வேட்கையைக் காணக்கூடியதாக இருந்தது.

இவ்வாறு தாயகத்துக்கு வெளியே தம்மை ஒரு பண்பாட்டுச் சமூகமாக கட்டிக் காக்கும் விடயத்தில் தமிழ் டயஸ்பொராவை பொறுத்தவரை யுத்தம் ஒரு முக்கிய பங்கை வகித்தது. போரால் சிதைக்கப்பட்ட தாயகத்தை நோக்கிய பிரிவேக்கத்தோடு தமிழ் மக்கள் ஒரு சமூகமாகத் திரட்டக்கூடிய வாய்ப்புகளை ஆயுதப் போராட்டம் அதிகம் உருவாக்கியது. குறிப்பாக புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் தமிழ் மொழிப் பள்ளிகளையும் கலாசாரத் தொடர்ச்சியையும் பேண வேண்டும் என்ற பெரு விருப்பம் விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் இருந்தது. தாயகத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த கருநிலை அரசிடம் டயஸ்போராவை தாயகத்துக்கு வெளியே ஒரு அரசியல் பண்பாட்டுச் சமூகமாகத் திரட்டுவதற்கான ஒரு நிகழ்ச்சி நிரல் இருந்தது.

ஆனால் 2009க்குப் பின்னரான தமிழ்ச் சமூகம் படிப்படியாகத் துரர்ந்து போகின்றது. புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் ஆயிரம் பிளவுகள். அவற்றில் பெரும்பாலானவை அரசியல் பிளவுகள். ஆனால் ஒரு பண்பாட்டுச் சமூகமாக அவர்கள் ஒன்றாகத் திரள முடியும்.

இந்த அடிப்படையில் பார்த்தால் கனடாவில் கட்டியெழுப்பப்படவுள்ள சமூக மையமானது தமிழ் மக்களை தலைமுறைகள் தோறும் ஒரு பண்பாட்டுச் சமூகமாக நிறுவனமயப்படுத்த உதவுமா?

இவ்வாறு உருவாக்கப்படும் கொம்யூனிட்டி சென்டர்களை- சமூக மையங்களை- முதலாம் தலைமுறைப் புலம் பெயரிகள் எப்படி பார்க்கிறார்கள் என்பதற்கும், இரண்டாம் மூன்றாம், அடுத்தடுத்த தலைமுறையினர் எவ்வாறு பார்க்கிறார்கள் என்பதற்கும் இடையே ஒரு இடைவெளி அல்லது வேறுபாடு இருக்கத்தான் செய்யும். அது தலைமுறை சார்ந்த வேறுபாடு மட்டுமல்ல அதைவிட ஆழமானது.

மனித குல வரலாறு என்பது அவ்வாறு வேர்களை அறுத்துக் கொண்டு புலம் பெயர்ந்த சமூகக் கூட்டங்களின் வரலாறுதான். மனித குலம் தோன்றிய பொழுதே ஒரு புலம் பெயரிதான். மனித குல வரலாறு என்பது புலப்பெயர்ச்சியின் வரலாறுதான். எனவே புலப்பெயர்ச்சியின் துயரமும் தவிப்பும் ஈருடகத் தன்மையும் முழு மனித குலத்துக்கும் பொது வானவை. சர்வ வியாபகமானவை. சாசுவதமானவை.

இப்படிப்பட்டதோர் உலகளாவிய அனுபவத்தின் பின்னணியில் நவஜீவன், என்னிடம் கனடாவில் கட்டியெழுப்பப் படவிருக்கும் கொம்யூனிட்டி சென்டரைக் குறித்து எழுதுமாறு கேட்டார். வழமையாக புலம் பெயர்ந்த சமூகத்தை தாயகத்தின் நோக்குக் கோணத்தில் இருந்து பார்த்துப் பேசியும் எழுதியும் வந்த எனக்கு இது சற்று வித்தியாசமானது.

நான் தாயகத்தின் நோக்கு நிலையில் இருந்துதான் பார்ப்பேன் சிந்திப்பேன். அதுதான் என்னுடைய இயற்கை. அப்படிதான் முதலாம் தலைமுறைப் புலம்பெயரிகள் தமது ஈருடக நோக்கு நிலையில் இருந்துதான் சிந்திப்பார்கள். இந்த அடிப்படையில்தான் முதலாம் தலைமுறை புலம் பெயரிகள் தாம் புலம்பெயர்ந்த நாடுகளில் கட்டியெழுப்பும் சமூக மையங்களையும் பார்க்கின்றார்கள். எப்படி இரண்டாம் மூன்றாம் அடுத்தடுத்த தலைமுறைகளை தாயகத்தை நோக்கிப் பிணைத்து வைத்திருப்பது? என்றுதான் அவர்கள் அதிகமாகச் சிந்திப்பார்கள்.

உலகின் மிக நீண்ட டயஸ் பொராக்களில் ஒன்று ஆகிய யூத சமூகத்தைப் பொறுத்தவரை அவர்களுடைய வரலாறும், அவர்களுடைய மதமும், இரண்டாம் உலக மகா யுத்தம் வரையிலும் அவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இன அழிப்பும் அவர்களை ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு இன விழிப்போடும் தாயகத்தை நோக்கிய தவிப்போடும் தேசிய வேட்கையோடும் ஒரு சமூகமாகத் திரட்டி வைத்திருந்தன.

ஆனால் ஈழத் தமிழர்களின் நிலை அவ்வாறு இல்லை. போர்க்காலங்களில் இன அழிப்புக்கு உள்ளாகிய தமது தாயக உறவுகளை நோக்கித் தமிழ் டயஸ்போரா ஈர்க்கப்பட்டு இருந்தது. ஆனால் கடந்த 15 ஆண்டுகளாக அந்த ஈர்ப்பு விசை குறையத் தொடங்கிவிட்டது.

என்னுடைய நண்பர், பேராசிரியர் ஜெயசங்கர் ஒரு முறை என்னிடம் கேட்டார், "உன்னுடைய சகோதரன் உனக்கு உதவுவதைப் போல உன்னுடைய சகோதரத்தின் பிள்ளை உன்னுடைய பிள்ளைக்கு உதவுமா?" என்று. இந்தக் கேள்வியை வேறு விதமாக ஸ்கன்டிநேவிய நாடு ஒன்றின் கொழும்புக்கான தூதுவர் என்னிடம் கேட்டார். முதலாம் தலைமுறை படிப்படியாக இறந்து போனால், அடுத்தடுத்த தலைமுறைகள் தாயகத்தை நோக்கிய ஏக்கத்தோடும் தவிப்போடும் தாயகத்தின் சமூகப் பொருளாதார அரசியல் விவகாரங்களோடு பிணைக்கப்பட்டிருக்குமா? என்று.

இலங்கை அரசாங்கமும் உட்பட தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் பெரும்பாலான நாடுகளின் அரசாங்கங்கள் அவ்வாறுதான் சிந்திக்கின்றன. முதலாவது தலைமுறை புலம் பெயரிகள் வயதாகி இறந்து செல்லும்பொழுது காலப்போக்கில் டயஸ்பொறாவுக்கும் தாயகத்துக்கும் இடையிலான பிணைப்புகளின் வீரியம், தொடர்ச்சி குறைந்து விடும் என்று.

அவ்வாறு தாயகத்துக்கும் தமது சந்ததியினருக்கும் இடையிலான பிணைப்பின் வீரியம் குறையக்கூடாது என்று கருதும் முதலாம் தலைமுறைப் புலம் பெயரிகள் தாங்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் கட்டி எழுப்பப்படும் சமூக மையங்களை அந்த நோக்கு நிலையில் இருந்தே கட்டியெழுப்ப முயற்சிக்கின்றார்கள்.

அவர்களுடைய ஈருடக வாழ்க்கை நிலையைப் பொறுத்தவரை அவர்கள் அப்படித்தான் சிந்திப்பார்கள். ஆனால் இரண்டாம், மூன்றாம், அடுத்தடுத்த தலைமுறைகள் அவ்வாறுதான் சிந்திக்கும் என்று எடுத்துக்கொள்ளத் தேவையில்லை.

முதலாம் தலைமுறைப் புலம் பெயரிகள் கிடைக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அல்லது உடல் வலு உள்ளவரை தாயகத்தை நோக்கி வந்து கொண்டே இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக 2009க்குப் பின்னர் பலர் தமது சொந்தக் கிராமங்களில் தமக்கு விரும்பிய இடத்தில் ஒரு காணியை வாங்கி விரும்பிய சைலில் வீடுகளைக் கட்டி வருகிறார்கள். முன்பு தமது ஊரில் குறிப்பிட்ட இடத்தில் ஒரு காணியை வாங்குவது என்பதனை கற்பனை செய்ய முடியாத சமூகப் பின்னணியை அல்லது நிதிப் பின்னணியைக் கொண்டிருந்தவர்கள், இப்பொழுது புலப் பெயர்ச்சியின் விளைவாகத் தேடிய தேட்டத்தை வைத்து அவ்வாறு விரும்பிய இடத்தில் காணியை வாங்கி, விரும்பிய சைசில் வீட்டைக் கட்டும் ஒரு வளர்ச்சிக்கு வந்திருப்பது பெருமைக்குரியது.

ஆனால் அந்த வீடுகளில் அவர்கள் பருவ காலப் பறவைகளைப் போலவே வருகிறார்கள். பெரும்பாலான காலங்களில் அந்த வீடுகள் சிசிரிவி கமராக்களால் கண்காணிக்கப்படுகின்றன. அல்லது செக்யூரிட்டி நிறுவனங்களால் பாதுகாக்கப்படுகின்றன. தொண்டைமானாறி

லிருந்து பருத்தித்துறை நோக்கி செல்லும் கடற்கரைச் சாலையில் அவ்வாறு பிரமாண்டமான வீடுகளைக் காணலாம். நான் இருக்கும் பகுதியில் மட்டும் அவ்வாறு மூன்றுக்கும் மேற்பட்ட வீடுகள் உண்டு.இப்படி எல்லாக் கிராமங்களிலும் பெரிய, பெரிய ஆளில்லாத வீடுகளைக் காண முடியும். கடந்த 15 ஆண்டுகளாக எழுச்சி பெற்று வரும் ஒரு புதிய போக்கு இது. இதற்குள் இருக்கிறது முதலாம் தலைமுறை புலம்பெயரியின் ஏக்கமும் தவிப்பும் நிராசையும்.

இப்புதிய போக்கின் பின்னணியில், மூன்றாவது புலப்பெயர்ச்சி அலை ஒன்று நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதில் புலம்பெயரும் பெரும்பாலானவர்கள் படித்தவர்கள்,முக்கிய பொறுப்புகளை வகித்தவர்கள்,துறைசார் நிபுணத்துவத்தைக் கொண்டவர்கள். எனினும் இவ்வாறு புலம்பெயரும் ஒரு பகுதியினர் அங்கே செற்றிலாக முடியாமல் மீண்டும் தாயகத்தை நோக்கி வருகிறார்கள். இது மூன்றாவது புலப்பெயர்ச்சி அலைக்குரிய வித்தியாசமான பண்புகளில் ஒன்று.

இவ்வாறு ஒரு புறம் முதலாம் தலைமுறைப் புலம் பெயரிகள் தாயகத்தில் பெரிய சொகுசான வீடுகளைக் கட்டி வருகிறார்கள். இன்னொருபுறம் மூன்றாவது புலப்பெயர்ச்சி அலை ஒன்று நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அதாவது போக்கும் வரவும்.

இப்படிப்பட்டதோர் போக்கும் வரவுமான சமூக அரசியல் பொருளாதாரச் சூழலில் புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ் மக்கள் தங்களை ஒரு பண்பாட்டுக் குழுமமாக கட்டியெழுப்புவது எப்படி?

தேசம் என்ற அரசியல் பரிமாணத்தின் அடிப்படையில் அவர்கள் தங்களைக் கட்டியெழுப்புவதில் அடிப்படையான பௌதிக வரையறைகள் உண்டு. தாயகத்துக்கு வெளியே ஒரு தாயகத்தை கட்டியெழுப்புவதில் அடிப்படையான வரையறைகள் உண்டு. ஆனால் தாயகத்துக்கு வெளியே ஒரு பண்பாட்டுக் குழுமமாக தமிழ் மக்கள் தங்களை கட்டியெழுப்ப முடியும். 2009க்கு முன்பு வரை போர் அவ்வாறு தமிழ் மக்களை ஒரு திரட்சியாக்கியது. 2009க்குப் பின் அதை எந்தெந்தத் தளங்களில் செய்வது ?

தங்கள் அடுத்தடுத்த சந்ததிகளுக்கும் தமது தாயகத்துக்கும் இடையிலான பிணைப்பைப் பலப்படுத்த யோசிக்கும் எல்லாப் புலம்பெயர்ந்த சமூகங்களும் அரசியல், பொருளாதாரம், பண்பாடு ஆகிய தளங்களில்தான் அந்த பிணைப்பைப் பலப்படுத்தலாம்.

அரசியல் ரீதியாக அந்த பிணைப்பு இப்பொழுதும் உண்டு. ஆனால் அதே அரசியல்தான் புலம்பெயர்ந்த தமிழ் மக்களை பல துண்டுகளாகப் பிரித்தும் வைத்திருக்கின்றது. பொருளாதாரத் தளத்தில் இது தொடர்பாக ஒருங்கிணைந்த செயற்பாடுகள் குறைவு. என்றாலும், உதிரிகளாக முதலீட்டாளர்கள் தாயகத்தை நோக்கி வருகிறார்கள்.ஆனால் அது போதாது.

பண்பாட்டுத் தளத்தில் மரபுரிமை மாதங்களையும் நாட்களையும் பிரகடனப்படுத் துவதன் மூலம் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் தன்னை ஒரு திரட்சியாக கட்டமைக்க முயற்சிக்கின்றது.

அவ்வாறு பண்பாட்டுத்தளத தில் எந்தெந்த விடயங்களில் தமிழ் மக்கள் தங்களுடைய அடையாளங்களை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் கடத்தலாம் என்று சிந்திக்கலாம்.உணவுப் பெருவிழாக்கள் பாரம்பரிய விளையாட்டு விழாக்கள் மூத்த தலைமுறையினரை போற்றி மதித்துக் கொண்டாடுவத் புதிய தலைமுறைக்குள் துருத்திக் கொண்டு மேலெழும் ஆளுமைகளைக் கௌரவிப்பது் மரபுரிமைச் சுற்றுலாக்கள்... போன்ற பல்வேறு விடயங்களிலும் கவனம் செலுத்தலாம். இதை ஒரு கட்டுரைக்குள் மட்டும் கூறிவிட முடியாது. இது தொடர்பாக துறை சார்ந்த நிபுணர்கள் தாயகத்திலும் டயஸ்போராவிலும் ஒன்றுகூடி எந்தெந்த விடயப் பரப்புகளில் தமிழ் மக்களை ஒரு பண்பாட்டுக் குழுமமாகப் பலப்படுத்துவது என்று திட்டமிட வேண்டும்.

மேலும் கொம்யூனிட்டி சென்டர் என்பது ஒரு இடையூடாட்டப் பரப்பாக மட்டும் இல்லாமல், மரபுரிமை தொடர்ச்சியை,வரலாற்றுத் தொடர்ச்சியை,பண்பாட்டுத் தொடர்ச்சியைப் பேணும் காட்சிக் கூடமாகவும் கட்டமைக்கப்பட வேண்டும்.

தாயகத்துக்கு டயஸ்பொறாவுக்கும் இடையிலான ஸ்திரமான தொடர்ச்சியான இடையூடாட்டத் தளங்களை (collaborated space) ஸ்தாபிக்க வேண்டும். தாயகத்துக்கும் டயஸ்பொராவுக்கும் இடையிலே எந்தெந்த துறைகளில் இடை யூடாட்டங்களை ஏற்படுத்தலாம் என்றும் சிந்திக்க வேண்டும். தாயகத்தை நோக்கிய மரபுரிமைச் சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்தலாம்.சுற்றுலாப் பயணிகளாக மட்டும் தாயகத்துக்கு வரும் ஒரு நிலைமையை மாற்றி விடுமுறை காலங்களில் குறிப்பிட்ட சில மாதங்களுக்கு தாயகத்தில் தங்கி நின்று தேச நிர்மாணத்தில் எப்படிப் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் தனக்குரிய துறை சார்ந்த பங்களிப்பைச் செய்யலாம் என்று சிந்திக்கலாம். அதாவது புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் தமிழ் மக்கள் கட்டியெழுப்பும் சமூக இடையூடாட்ட மையங்களானவை தாயகத்தில் தேசத்தை நிமாணிக்கும் நிகழ்ச்சிநிரலின் பிரிக்கப்படவியலாத பகுதிகளாக இணைத்துச் சிந்திக்கப்பட வேண்டும். ஏனென்றால் தாயகத்தில் தமிழ் மக்களுக்கு இன்னமும் விடுதலை கிடைக்கவில்லை.



**நிலாந்தன்**

---

**தமிழ்ச் சமூகமையம் தாயகத்தில் வாழும் மக்களுக்கும் எமது இளம் தலைமுறையினருக்கும் இடையில் எவ்வாறான பிணைப்பினை ஏற்படுத்தும்?**

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தாயகத்துடனான தமது தொடர்புகளை இன்றுவரை பேணி வருகின்றார்கள். ஆனால் இந்த நிலமை அடுத்தடுத்த தலைமுறைகளி தொடருமான என்பது மிகப்பெரிய கேள்வி.

தமிழ் மக்கள் தமது வேர்களை தொலைத்து விடாமல் இருப்பதற்கான ஒரு முயற்சியாகவே தமிழ்ச் சமூகமையம் உருவாக்கப்படுகின்றது.

இதன் மூலமாக தாயகத்தில் வாழும் மக்களுடனான உறவுப் பிணைப்பினை நாம் தொடர முடியும்.

தமிழ்ச் சமூகமையத்திற்கு செல்லும் எமது அடுத்த தலைமுறைக் குழந்தைகளுக்கு எமது பாரம்பரியங்கள் குறித்தும் நாம் கடந்து வந்த பாதைகள் குறித்தும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

தமது பெற்றோர் அல்லது பெற்றோரின் பெற்றோர் எவ்வாறனா வாழ்கை முறையை கொண்டிருந்தார்கள் அவர்களுக்கும் தாயகத்தில் வாழும் உறவுகளுக்கும் இடையிலான பிணைப்பு எவ்வாறு இருந்தது தாம் கல்வி கற்ற பாடசாலையை அபிவிருத்தி செய்வதற்கு தமது கிராமங்களை முன்னேற்றுவதற்கு எவ்வாறாக அவர்கள் உழைத்தார்கள் என்பதை அறிந்து கொள்வதற்கு எமது ஆவணக்காப்பகமும் தனி மனித வரலாற்று ஆவணப்படுத்தலும் பேருதவி புரியும்.

இதன் மூலமாக எமது இளம் தலைமுறை தமது கடமைகைள அறிந்து கொண்டு தாயகத்தில் உள்ள தொப்புள் கொடி உறவுகளுடனான நெருக்கமான தொடர்புகளை பேண முடியும்.

தாயகத்தில் உள்ள கலைஞர்கள் மற்றும் படைப்பாதளர்களுக்கும் புலம்பெயர் நாடுகளில் வாழும் இளம் தலைமுறையினருக்கும் இடையிலான நெருக்கத்தை உருவாக்கும் வகையிலான்சி திட்டங்களை தமிழ்ச் சமூகமையம் ஏற்பாடு செய்யும்.

அதன் மூலமாக கண்டங்கள் கடந்து வாழும் ஒரு தேசத்தின் மக்கள் தமக்கிடையிலான கருத்துப் பரிமாற்றங்களை தொடர முடியும்.

அதேபோன்று வர்த்தக முயற்சிகள், முதலீடுகள் மற்றும் மனித நேயப் பணிகளை முன்னெடுப்பதற்கான ஒரு செயற்பாட்டு மையமாக தமிழ்ச் சமூகமையம் விளங்கும்.

AUDIO QR CODE

# தமிழ்ச் சமூக மையம் என்பது காலத்தின் தேவை

> இந்த மண்ணில் குடியேறிய பல்லின மக்களும் தங்களுக்கென சமூக மையங்களை வைத்திருப்பதற்குக் காரணம் இருக்கிறது. சிறந்த தமிழ்ச் சமூகமையம் அமைப்பதற்கான தேவையும் அதற்கான நிதியும், மக்களின் தனிப்பட்ட முயற்சிகள் அவசியம்.



இப்படி ஒரு தலைப்பில், ஒரு கட்டுரை இந்த மலரில் வருவதில் உள்ளூர குளிர்ச்சியடையும் ஒரு சில தமிழர்களும் இந்த நாட்டில் வாழ்கிறார்கள் என்பதில் மொத்தமாய் வெட்கப்படும் பல தமிழர்களில் நானும் ஒருவன்.

தன் சமூகத்திற்கு காத்திரமான எந்தப் பங்களிப்பையோ ஒத்துழைப்பையோ குரலையோ கொடுக்காமல், தமிழ் சமூகத்தை வைத்தே தங்கள் வியாபாரங் களையும் தன்னிலை புகழ்பாடல் களையும் தகுதரங்களையும் உயர்த்திக்கொள்ள, சமூக ஊடகங்களில் துள்ளிக்குதிக் கிறார்கள் சில ஈழத் தமிழர்கள். கனடாவில் ஈழத்தமிழர் அதிகம் செறிந்துவாழும் ரொறன்ரோ பெரும்பாகத்தில், அவர்களது சமூக மூத்தோர் முதியோரின் பாதுகாப்பும் பராமரிப்பும் பற்றி அதிகம் அக்கறை கொள்ளாமல், வெறுமனே வசை பாடிக்கொண் டிருக்கும் இவர்களது செயல்கள் வெட்கத்திற்குரியவை.

தை மாதம் தமிழர்களின் மரபுரிமை மாதம் என்பதற்கு சமூக ஊடகங்களில் வாழ்த்துக்கூறும் இவர்கள், தமிழ் மக்களின் செழிப்பான வரலாற்றையும் பண்பாட்டையும் மொழி அழகையும் கொண்டாடுவதற்கு போட்டிபோடும் இவர்கள், தமிழர்களின் பாரம்பரிய இலக்கியப் படைப்புகள் முதல் இன்றைய நவீன உலகில் தமிழர்களின் பெரு வெற்றிகளின் பின்னால் தமிழ் மரபின் தொன்மையும் அதன் மீள்திறன் ஆற்றலும் புத்தாக்க சிந்தனைகளும் நிறைந்திருக்கின்றன என்பதையும் உள்ளூர ஏற்றுக்கொள்கிறார்கள். இருப்பினும், எண்பதுகளில் புலம்பெயர்ந்து இந்நாட்டில் குடியேறி, இப்போது தங்கள் முதுமைக்காலத்தை நகர்த்தும் எமது மூத்தவர்களுக்கு, ஒரு சமூக மையம் எவ்வளவு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிந்திருந்தும், ஏனோ விதண்டாவாதம் செய்கிறார்கள்.

தாயகத்தில் சனசமூக நிலையம் என்றும், பொது நூலகம் என்றும், மக்கள் சந்தை என்றும், சிரமதானம் என்றும், எமது மக்கள் ஒன்றுகூடும் பொது இடங்கள் அதிகம். கோயில் களில், பாடசாலை வளாகங் களில், விளையாட்டு மைதானங் களில், சந்தைகளில், முச்சந்தி நாற்சந்திகளில், தண்ணீர் எடுக் கும் பொது இடங்களில், குளங் கள் ஏரிகள் கடற்கரைகளில், எமது மக்கள் எப்போதும் ஒன்றுகூடி குசலம் விசாரித்தும், நட்பைப் பரிமாறியும் அன்போடு வாழ்ந்த காலங்கள் மறக்க முடியாதவை.

> சாதாரணமாகத் தங்கள் இன அடையாளத்தை பேணிக் கொள்ள முயற்சியுள்ள சமூகங் கள், இந்த முயற்சிகளை வெற்றியுடன் நிறைவேற்றுகின்றன.

புலம்பெயர்ந்த நாடுகளில், பக்கத்து வீடுகளில் குடியிருப்பவர்களுடன்கூட எந்தத் தொடர்புகளுமின்றி அதிகம் தனித்து விடப்பட்ட எமது மக்களுக்கு, தமது மொழி பேசும் மக்களுடன் பொது இடங்களில் சந்திக்கும் ஏக்கம் இருப்பது தவிர்க்கமுடியாதது. இருந்தாலும், இந்நாட்டின் காலநிலையும், எமது நாட்டைப்போல் விரும்பியபடி எவரது வீடுகளையும் முன்பதிவு அல்லது முன்-அனுமதி இன்றி தரிசிக்க முடியாத புதிய பண்பாட்டுச் சூழமைவும், எங்கு யார் வாழ்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள முடியாத சவால்களும் இந்தத் தொடர்பாடல்களைத் தடுத்து விடுகிறது. இதற்கான ஓர் மாற்றீடாக இருப்பது இங்குள்ள பல்வேறு சமூக அமைப்புக்களின் கட்டமைக்கப்பட்ட சந்திப்புக்களும் நிகழ்ச்சிகளுமே. இது தவிர, அயல் அட்டங்களில் வாழும் எமது மொழிபேசுகின்ற, எமது போக்கிற்கு ஒத்துப்போகின்ற எம்மவர்களோடு, ஆற-அமர இருந்து உரையாடி, மகிழ்ந்து குலாவி, நாம் விரும்புகின்ற காட்ஸ் (சீட்டாட்டம்), எட்டு, டக்-டிக்-டோஸ், ஆடும் புலியும், பாம்பும் ஏணியும் போன்ற பல எமதுகால விளையாட்டுக்களை எம்மவர்களோடு விளையாடி மகிழ, பழங்கதைகள் பேசி மகிழ, நகைச்சுவைக் கதைகளும் அந்தக்கால திரைப்படக் கதைகளும் பேசி மகிழ வாய்ப்புகளின்றி தனிமையில் காலம் கழிகிறது. எம்மவர்களைச் சந்தித்து உரையாட, உறவாட, மகிழ்ச்சியைப் பரிமாற ஒரு பொது இடம் தேடி அலையும் எமது மக்கள், பொது வர்த்தக அங்காடிகள் (Shopping Malls), பூங்கா போன்ற இடங்களில் சந்திக்கிறார்கள். இருந்தாலும், அங்காடிகளில் சந்திக்கும் இவர்கள் சந்திக்க நேரிடும் சவால்கள் அதிகம். சத்தம் போடாதீர்கள், நீண்டநேரம் எடுக்காதீர்கள், கண்டதையும் சாப்பிடாதீர்கள், இத்தனை பேர்தான் ஓரிடத்தில் நிற்கலாம் என்றெல்லாம் பல நிபந்தனைகள், சவால்கள். எமது ஊரில் உள்ள சனசமூக




> பல்வேறு நாட்டவர்களுக்கும் தங்கள் இன அடையாளங்களையும் கலாச்சாரங்களையும் பொறுத்து சமூக மையம் கட்டும் முயற்சிகள், வெற்றியுடன் நிறைவடைகின்றன.

> றொறன்ரோ பெருநகரில், தமிழ் சமூகத்திற்கு ஒரு சமூக மையம் அவசியம் என்பதில் கருத்துபேதங்களை மறந்து அனைத்துத் தமிழரும் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாயம்.

நிலையங்களும், ஆறுகால் எட்டுக்கால் திறந்த மண்டபங்களும், எமது கோயில்களில் அழகாகக் கட்டப்பட்டுள்ள நீண்ட காற்றோட்டமுள்ள பல திறந்த ஓய்வு மாடங்களும் எமது நினைவில் நிழலாட, இந்தப் புலம்பெயர் மண்ணில் தனியாக வலியோடு காலம் கழிகிறது.

இத்தகைய வலி தனியாக தமிழர்களுக்கு மட்டுமானது அல்ல. அத்தனை உயிரினங்களுக்கும், அத்தனை நாட்டவர்களுக்கும் இது பொருந்தும். அதனால்தான், போதிய ஆய்வுகளுக்குப் பின்னர்தான், புலம்பெயர்ந்து இந்நாட்டில் குடியேறிய பல்லின மக்களும் தங்களுக்கென பிரத்தியேக சமூக மையங்களை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். சமூக மையம் கட்டுவது முட்டாள்தனம் என்று வாதிடும் இந்த குறுகிய எண்ணம் கொண்டோர், இத்தகைய சமூக மையங்களை தங்கள் மக்களுக்கென உருவாக்கி வைத்திருக்கின்ற கிரேக்க, சீன, ஆர்மேனிய, அரபிய, ஆபிரிக்க, ஜேர்மனிய, இந்திய, யூத மக்களுடைய பிரத்தியேக சமூக மையங்களையெல்லாம், அவர்களது முட்டாள் முயற்சி என்றும், பயனற்ற முன்னெடுப்பு என்றும் கூறுவார்களா? அதனால், இந்த மண்ணில் குடியேறிய பல்லின மக்களும் தங்களுக்கென சமூக மையங்களை வைத்திருப்பதற்குக் காரணம் இருக்கிறது என்பது உண்மையென்றாலும், தமிழர்களில் சிலர் மட்டும், தங்கள் இனத்திற்கான இந்த முன்முயற்சியை ஏளனம் செய்து எள்ளி நகையாடி, இந்த முயற்சியில் ஈடுபடும் நல்லுள்ளங்களின் உற்சாகத்தை உடைத்து, இதற்கு ஆதரவு கொடுக்கும் தன்னார்வத் தொண்டர்களையும் நன்கொடையாளர்களையும் நலினம் செய்வது அபத்தம்.

ஸ்காபரோ குடியிருப்பாளர்கள் எதிர்கொள்ளும் மூன்று குறிப்பிடத்தக்க சவால்களை ஆரம்பத்தில் அடையாளம் கண்டபின்னரே, இந்த சமூக மையத்திற்கான தேவை உணரப்பட்டு, காத்திரமான முயற்சிகள் முகிழ ஆரம்பித்தன. இப்பகுதிகளில் தனியாகத் தங்கி வாழும் முதியவர்களின் வருமானம், அரசாங்க வீடுகளில் வசிப்பவர்களை விட மிகவும் குறைவாக உள்ளது, அவர்கள் வேலை மற்றும் சேவைகளை அணுக நீண்ட பயண நேரங்களை எதிர்கொள்கிறார்கள், மற்றும் அவர்களின் தேவைகளை அடையாளம் காண அவர்களுக்கு வழிகள் இல்லை. இத்தகைய சவால்கள் அதிகளவில் இவர்கள் சமூகத்தில் இருந்து விலகிச் செல்ல காரணமாக இருப்பதுடன் மோசமான வாழ்க்கைத் தரத்திற்கு வழிவகுக்கின்றன.

தமிழ்ச் சமூகமையத்தைக் கட்டுவதற்கு கனடா அரசாங்கமும் ஒன்ராறியோ அரசாங்கமும் 26.3 மில்லியன் டொலர் நிதியை அறிவித்தன. றொறன்ரோ நகரசபை, இதற்கான காணியை வழங்கியது. கட்டுமான செலவுகளுக்கான மீதியான நிதி தமிழ் சமூகத்தால் திரட்டப்படுகிறது. சமூக மையம் கட்டுவதற்கான இந்த வரைமுறைகள், றொறன்ரோ பெரும்பாகத்தில் வாழும் பல்வேறு சமூகத்தினருக்கும் பொதுவான ஒரு நடைமுறையே. இத்தகைய முயற்சிகளை மேற்கொண்ட அனைத்து சமூகங்களும் இதில் வெற்றிபெற்றுவிடவில்லை. தமது மூத்தவர்கள் முதியவர்களின் நலனில் அக்கறை கொண்ட சமூகங்களும், தங்களது இன அடையாளங்களைத் தொலைத்துவிடக்கூடாது என்பதில் அதீத அக்கறைகொண்ட இனங்களுமே, இப்படியான சமூக மையத்திற்கான திட்டங்களை வெற்றியோடு நிறைவாக்கி, அதன் அதீத பயன்களை பல வருடங்களாக அனுபவித்து வருகின்றன. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து மூத்த குடி என்று அங்கும் இங்கும் பேசிக்கொண்டு காலத்தைக் கழிக்கும் பலரும், அத்தகைய மூத்த குடியை, மூத்த மொழியை, மூத்த விழுமியங்களை, அழிந்துவிடாமல் கட்டிக் காப்பதற்கு மறுக்கின்றார்கள்.

பல இலட்சங்களைக் கடந்து நிற்கும் தொகையில் ஈழத்தமிழர்கள் அதிகம் செறிந்து வாழுகின்ற றொறன்ரோ பெருநகரில், இந்த சமூகத்தின் பிரதான அடையாளமாகவும், காப்பரணாகவும், கலை கலாச்சார வரலாற்று விழுமியங்களைத் தக்கவைப்பதற்கான இருப்பிடமாகவும், ஒரு சமூக மையம் அவசியம் என்பதில் கருத்துபேதங்களை மறந்து அனைத்துத் தமிழரும் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாயம். இதற்கான பேராதரவை மட்டுமல்ல, நிதிப் பங்களிப்பையும் தாராளமாக வழங்கி உதவுவது எமது நீள்பயணத்திற்கான பலமான அத்திவாரக்கல்லாக அமையும் என்பது திண்ணம்.



**குயின்ரஸ் துரைசிங்கம்**

போருக்கு பின்னரான சமூக கட்டமைப்பில் இச் சன சமூக நிலையங்கள் பிரதான பங்காற் றியிருக்கும். பல சன சமூக நிலை யங்கள் இயங்கு நிலையற்றுள்ளன.




# சனசமூக நிலையத்திலிருந்து சமூக நிலையம் நோக்கி

AUDIO QR CODE

ரொரன்ரோவில் அமையவுள்ள சமூக நிலையமானது முதியோர்கள் மற்றும் இளை ஞர்கள், மாணவர்களை உள்ள டக்கியதாகவும், அவர்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியதாகவும் இருக்கும் என நம்புகின்றேன்.

என்பத்தி மூன்று இனக் கலவரம் நடைபெற்ற காலங்களில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. அக் காலங்களில் பல இளைஞர்கள், நடுத்தர வயதினர் ஊரடங்கு இல்லாத காலங்களில் ஊரில் உள்ள சனசமூக நிலையங்களில் சந்திப்பார்கள். ஊரில் உள்ள சனசமூக நிலையங்களில் ஒரு சிறு நூலகமும் இருக்கும். அங்கு நாளாந்த செய்தித் பத்திரிகைகள் இருக்கும். செய்திப் பத்திரிகைகள் வாசிக்கவௌ வருபவர்கள் செய்தித் தாள் செய்திகளை அங்கிருந்தே அலசி ஆராய்வார்கள். கலவரத்தால் பாதிக்கப்பட்டு ஊர் திரும்பியவர்களும், தங்களது உறவுகளை, நண்பர்களைச் சந்திக்கும் இடமாகவும் சனசமூக நிலையங்களில் விளங்கின

என்பத்தி மூன்று கலவர காலங்களில் தமிழ் மக்கள் மீதான அரசின் அடக்குமுறை பற்றி இச் சனசமூக நிலையங்களிலும், மதகடிகளிலும் கதைக்கப்பட்டன. உரையாடப்பட்டன. பாதிக்கப்பட்ட பலரது வலிகளை வெளிப்படுத்துமிடமாகவும் இருந்தன. சனசமூக நிலையங்கள் இளைஞர்கள் சந்திக்கும் களமாகவும், கருத்து பரிமாற்றும் இடமாகவுமிருந்தன. சிரமானங்களும் இச் சனசமூக நிலையங்களால் நடைபெற்றன. கிராமங்களின் அபிவிருத்திக்கும் உதவியதுடன், இளைஞர்களை இணைக்கும் பாலமாகவும் இருந்தன.

மதகுகளிலிருந்து மடங்களுக்கு மாறி அதன் பரிமான வளர்ச்சியில் தோன்றியது சனசமூக நிலையங்கள். கிளப் கலாச்சாரம் தமிழ்ப் பிரதேசங்களில் தோன்றிய காலத்திலேயே சனசமூக நிலையங்களும் உருவாகிவிட்டன. மேல் தட்டு வர்க்கத்தினர் லயன்ஸ் கிளப், றோட்டறி கிளப் என கிளை அமைத்து உரையாடி, குடித்து மகிழ்ந்த போது, சன சமூக நிலையங்களில் கிராமங்களின் வளர்ச்சியிலும், கல்வியிலும் அக்கறை காட்டின. வாசிப்பின் வளர்ச்சிக்கு சன சமூக நிலையங்கள் ஆற்றிய பங்கு அளப்பரியது. பல கையெழுத்து சஞ்சிகைகளும் சன சமூக நிலையங்களுக்கு வரும் இளைஞர்களால் வெளியிடப்பட்டன.

1980களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 338 சனசமூக நிலையங்கள் இருந்ததாக நூலகர் நடராசா செல்வரசா ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியத்தின் வளர்ச்சிக்கு ஊர்ச் சனசமூக நிலையங்களும் வித்திட்டன. பல இளைஞர்கள் இயக்கங்களை நோக்கி நடைபோடுவதற்கும் இச் சன சமூக நிலையங்கள் உதவின. கிராமங்களில் விளையாட்டினை ஊக்கப்படுத்துவதிலும் சனசமூக நிலையங்கள் முன்நின்றன.

அதே சமயம் சாதிரீதியான பாகுபாடுகளும் இச் சனசமூக நிலையங்களில் இடம்பெற்றுள்ளன என்பது மறுப்பதற்கில்லை.

யுத்தகாலங்களில் புலம் பெயர்ந்த மக்கள் தாங்கள் சென்ற நாடுகளில் சிறு சிறு நூலகங்களை அமைத்து செயல்பட்டு வந்தனர். பல சஞ்சிகைகள் வெளிவந்தன. சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட சஞ்சிகைகள் 80களின் இறுதியில் வெளிவந்தன.

கனடாவிலும் உலகத் தமிழர் அமைப்பு ஒரு நூலகத்தையும் நடாத்திவந்தது. அதே காலப் பகுதியில் ஊரில் உள்ள சனசமூக நிலையம் போன்ற ஒன்று வெலஸ்லி அன்ட் பாலிமென்ற் பகுதியில் இயங்கிவந்தது. இயக்க பேதமின்றி பலரும் இந் நூலகத்தில் சென்று நூல்களை, பத்திரிகைகளை வாசித்தனர். அதனருகில் இருந்த தேநீர்க் கடை மற்றும் நூலகத்தில் மக்கள் தங்களது உணர்வுகளையும், வலிகளையும் பரிமாறிக்கொண்டனர். 94ன் நடுப்பகுதியில் (மே மாதம்) நூலகம் எரிக்கப்பட்டது. அங்கிருந்த பல ஆவணங்கள், நூல்கள் தீக்கிரையாகின.

2009ன் பின்னர் உலக அழகுராணிப் போட்டிகளில் கவனம் திரும்பியது. பல நிகழ்வுகள் சீன சமூக நிலையத்தில் நடாத்தப்பட்டன. பல சமூகங்களுக்கான சமூக நிலையங்கள் ரொரன்ரோவில் இயங்கின. அங்கெங்லாம் எமது நாடகங்கள், நடன மற்றும் இசை நிகழ்வுகள் நடைபெற்றன. 2014ல் ரொரன்ரோ மாநகர தேர்தல்கள் நடைபெற்றபோது மேயர் பதவிக்கு போட்டியிட்ட ஜோன் ரொரி, ஸ்காபரோவில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் கூட்டமொன்றில் தான் வெற்றி பெற்றால் ரொரன்ரோவில் தமிழர்களுக்கான சமூக நிலையம் அமைத்துக் கொடுப்பேன் எனக் கூறினார்.

ஜோன் ரொரி கூறியபடியே ரொரன்ரோவில் ஒரு தமிழ்ச் சமூகநியைம் அமைக்கப்படவுள்ளது. மாற்றுக் கருத்தாளர்களும் அதன் ஆரம்ப நிர்வாக சபையில் உள்ள னர். சமூக நிலையத்துக்கான நிலமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இனி தமிழ் மக்கள் இணைந்தால் புலம் பெயர் நாடுகளிலேயே அமையவுள்ள முதலாவது தமிழ்ச் சமூகநிலையத்தை அமைக்கலாம். அமையவுள்ள சமூக நிலையம் மாற்றுக் கருத்துக்களுக்கான ஒரு நிலையமாகவிருக்க வேண்டும்.

நாங்கள் படித்த முன்னால் பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய அதிகளவு நேரத்தையும், பணத்தையும் செலவழிக்கும் நாங்கள், நாங்கள் வாழந்து வந்த சன சமூக நிலையங்களை மீள அபிவிருத்தி செய்ய தவறிவிட்டோம். போருக்கு பின்னரான சமூக கட்டமைப்பில் இச் சன சமூக நிலையங்கள் பிரதான பங்காற்றியிருக்கும். பல சன சமூக நிலையங்கள் இயங்கு நிலையற்றுள்ளன.

இன்றைய நிலையில் ஊரில் சன சமூக நிலையங்கள் ஆற்றி வந்த மக்கள் சந்திப்பை இன்று சமூக வலைத்தளங்கள் செய்கின்றன. வற்ஸ் அப் போன்றன ஒரு இணைப்பை ஏற்படுத்தினாலும், நேரடியாக சந்தித்து உரையாடும், உணர்வுகளை பரிமாறும் சந்தர்ப்பம் அற்று கொரோனாக் காலத்து கூட்டினுள் வாழும் வாழ்க்கையே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சமூக மனிதர்களுக்கிடையிலான தனிமையை போக்கும் காரணிகளுள் ஒன்று சமூக நிலையங்கள்.

ரொரன்ரோவில் இயங்கிவரும் சமூக நிலையங்கள் செய்ய வேண்டிய பல விடயங்களை செய்யாமலேயே செயலற்று இயங்கிவருகின்றன. அவ்வாறு தமிழ்ச் சமூகநிலையம் இயங்காது என கருது கின்றேன்.

ரொரன்ரோவில் அமையவுள்ள சமூக நிலையமானது முதியோர்கள் மற்றும் இளைஞர்கள், மாணவர்களை உள்ளடக்கியதாகவும், அவர்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியதாகவும் இருக்கும் என நம்புகின்றேன். வெறுமனே ஒரு நடன நிகழ்வுகளையும், அழகிப் போட்டிகளையும் மட்டும் நடாத்துவதாக இருக்கக் கூடாது. அவ்வாறு அமையும் என்ற நம்பிக்கையுள்ளது.



ரதன்




AUDIO QR CODE

# ஒரு வட்டமும், தமிழ்ச் சமூகமையமும்

> "தமிழ்ச் சமூகமையமானது தமிழ்க் கனடியர்களின் எதிர் காலத் தமிழ்ச் சந்ததியை மனதில் வைத்தே இன்று திட்டமிடப்படுகிறது."

சமூக மையம் ஒன்று தமிழ்ச் சமூத்தினால் அமைக்கப் படுவதன் நோக்கம் என்ன? புதிதாக ஒரு கட்டிடம் கட்டி அங்கு தமிழ் விழாக்களைக் கொண்டாடவே அது அமைக்கப்படுகிறது என்ற வகையிலமைந்தொரு புரிதல்தான் இன்று நம் மக்கள் பலரிடம் முதன்மையாகக் காணப்படுகிறது. ஒரு வகையில் அது சரியானதேயாயினும், அதையும் தாண்டி இன்னும் பல விடயங்கள் உண்டு என்பது பொதுப்பரப்பிற்கு இன்னும் தெரிவதாக இல்லை. தமிழ் இனத்தை மையப்படுத்தி கனடாவின் கலாச்சார பன்முகத் தன்மையைக் கொண்டாடுவது, கனடாவின் பல்வேறு கலாச்சாரங்களோடு தமிழ்க் கலாச்சாரத்தின் இணைப்பு பலமாவதை ஊக்குவிப்பது, தமிழ்ச் சமூக அங்கத்தவர்களிடையே சமூக ஈடுபாட்டை மேம்படுத்துவது, கல்வி மற்றும் சமூகம்சார் விழிப்புணர்வை தமிழ்க் கனடியர்களிடம் எடுத்துச் செல்வது, தமிழ் முதியோருக்கான நலத்திட்டங்களைத் தருவது, போதைப்பொருள் பாவனைக்கு, துப்பாக்கிக் கலாச்சாரத்திற்கு எதிரான அறிவூட்டல்களைச் செய்வது, அகதிநிலை கோருவோர், மற்றும் குடும்ப வன்முறை, உளவியல் பிரச்சினைகள், பாலியல் ஏற்றத் தாழ்வால் பாதிக்கப்படுபவர்கள் உட்பட பல்வேறு தன்னிலைசார் பிரச்சினைகள் கொண்டவர்க்கு அவர்தம் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட புரிந்துணர்வோடுகூடிய நம்பிக்கையைத் தருவது எனப் பல்வேறு நோக்கங்களை நம் சமூகமையம் ஊடாக நாம் சிறப்புறச் செய்து காட்டிட முடியும்.

இத்தகைய தூரநோக்கோடு அமைக்கப்படும் சமூக மையத்திற்காக அரசாங்கம் நிதி உதவி உட்பட ஆதரவுகள் பல தந்தாலும் சமூகத்திடம் இருந்து திரட்ட வேண்டிய நிதிச் சேகரிப்பு மந்தமாக இருக்கிறது என்று தெரியவருகிறது. எவ்வளவோ முயன்றும் மக்களின் நிதிப்பங்களிப்பு எதிர்பார்த்தது போல இல்லை என்ற வருத்தம் அதில் ஈடுபட்டிருக்கும் பல தொண்டூழியர்களுக்கு தொடர்ந்து இருக்கிறது. நிதிப்பங்களிப்பை பொது மக்களிடமிருந்து பெற்றெடுப்பதில் பல்வேறு வகைப்பட்ட சிரமங்களை தொண்டூழியர்கள் எதிர்கொள்கிறார்கள் என்பது நமக்கு வியப்பைத் தருவதாக இல்லை.

அதற்குக் காரணம் உண்டு. முன்னொரு காலகட்டத்தில் பொது நிதியாகச் சேகரிக்கப்பட்ட பெரு நிதியும், சொத்துக்களும் தனியார் கைவசம் சென்ற கசப்பான வரலாறு இன்னும் மக்களின் மனதில் இருக்கிறது. அந்த யதார்த்தம் இப்போது சமூக மையத்திற்கான நிதி சேக ரிப்பையும் பாதித்து நிற்கிறது. என்ன செய்வது? அதையிட்டு வருந்துவதை விடுத்து இதற்கு முந்தைய சமூக ஒழுங்கு எவ்வாறு இருந்தது அதை இப்போது எப்படி நிவர்த்திப்பது என்பதைத் தான் ஒரு சமூகமாக இனி நாம் பார்க்க வேண்டும்.

தமிழ்ச் சமூகமையமானது தமிழ்க் கனடியர்களின் எதிர் காலத் தமிழ்ச் சந்ததியை மனதில் வைத்தே இன்று திட்டமிடப்படுகிறது. இந்த நிலையில், துரதிஸ்டவசமாக இரண்டாம் மூன்றாம் தலைமுறையினர் நிதிப்பங்களிப்பை சற்று நிதானித்தே செய்கிறார்கள் அல்லது உதாசீனம் செய்கிறார்கள் என்பதும் கவனிக்கப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் எதிர்கால சந்ததியின் தமிழ்ச் சமூகநல அக்கறை குறித்த சந்தேகம் இப்போது பலமாக உணரப்படுகிறது. நிதிப்பங்களிப்பு வழங்குபவர் களில் பெருமளவினர் மூத்த தலைமுறையாகத்தான் இருக்கிறார்கள்.

தன்னலமற்றவராயும், தமிழ் நிலைப்பட்டும் இயங்கும் தொண்டூழியர்களை எதிர்கால சந்ததியிடம் நாம் காண்பது சிரமமே. இதை தெளிவுற நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆதலால் தமிழ்ச் சமூகமையத் திட்டம் இப்போது செய்யப்பட்டால் மட்டுமே தமிழருக்கானதொரு நிரந்தர கலாச்சார மையம் கனடாவில் உருவாவது சாத்தியம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதனால்தான் தமிழ்ச் சமூகமையம் அமைத்தே தீருவது என்று மூத்த தலைமுறை துடிப்புடன் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதனால்தான் இந்தச் சமூக மையம் அமைக்கப்படும் சகல முறைமைகள் குறித்த கவனத்தையும் இப்போது நாம் செலுத்த வேண்டியிருக்கிறது.

சமூக மையத்தை காரணமாக வைத்து, தமிழ்மீதும், ஈழத்தமிழர் மீதும் மாறாப்பற்றுக்கொண்ட பலதுறை சார்ந்த அறிவைக் கொண்டவர்களை இணைத்து இப்போதே எதிர்காலத் தமிழருக்கானதொரு பலமான தலைமைத்துவ அடித்தளத்தையும் நாம் அமைத்துத் கொள்ளவேண்டியதும் அவசியமாக இருக்கிறது. அந்த வகையிலமைந்த பலதுறை சார்அறிவு கொண்டவர்கள் சமூகத் தலைமையின் திறன்மிகு அடித்தளமாக அமையும்போது, இதற்கு முன்னர் நாம் எதிர்கொண்ட பல கசப்பான அனுபவங்கள் கணிசமாகக் குறைய வாய்ப்பு உண்டு.

அதுமட்டுமல்லாமல், தமிழ் மீதும், ஈழத்தமிழர்மீதும் மாறாப்

> **தமிழ்மீதும், ஈழத்தமிழர் மீதும் மாறாப்பற்றுக்கொண்டு இயங் கிவரும் தொழில் முனைவர்கள், அரசாங்கப் பணியாளர்கள், கல்விமான்கள், சட்ட வல்லுனர் கள், சமூக ஆர்வலர்களின் பங்களிப்பு சமநிலைப்பட்டுச் சேரும்போது சமூக மையத்தின் திறன்மிகு அடித்தளம் மேலும் வலுவானதாக மாறும்.**




பற்றுக்கொண்டு இயங்கிவரும் தொழில் முனைவர்கள், அரசாங்கப் பணியாளர்கள், கல்விமான்கள், சட்ட வல்லுனர்கள், சமூக ஆர்வலர்களின் பங்களிப்பு சமநிலைப்பட்டுச் சேரும்போது சமூக மையத்தின் திறன்மிகு அடித்தளம் மேலும் வலுவானதாக மாறும். கூடவே அதன் மூலம் தற்போது நிதி சேகரிப்பில் நாம் காணும் சிரமங்களுக்கும் உரிய ஆலோசனைகளும், பங்களிப்புக்களும் கிட்டுவதற்கான வாய்ப்புக்களும் கணிசமாக அதிகரிக்கும். இவை குறித்துப் பேச முனைவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இக்கட்டுரைக்காக செயற்கை நுண்ணறிவை உபயோகித்து, எப்பேர்ப்பட்ட வகையில் பலதுறை சார்ந்த அறிவைக் கொண்டவர்களை அடையாளம் காணலாம் என்று அறிய முனைந்த போது, அதன்மூலம் கிட்டிய வரைபடம் ஒன்றைக் கீழே காணலாம்.

படத்தில் காணப்படும் வெளிவட்டத்தை தமிழ்மீதும், ஈழத்தமிழர்மீதும் மாறாப்பற்றுக்கொண்ட இன்றைய சமூகம் என்று கற்பனை செய்து கொள்வோம். இந்த வட்டம் ஆறு சிறிய வட்டங்களை கொண்டிருப்பதைக் கவனிக்க முடியும். அச்சிறிய வட்டங்கள் நம் சமூக வளர்ச்சியின் போக்கை உறுதிப்படுத்தும் நிபுணத்துவம் கொண்டோரைக் காட்டும் வட்டங்களாகும். அவையாவன (1) சட்டம் சம்பந்தப்பட்டோர், (2) வியாபாரம் சம்பந்தப்பட்டோர், (3) கல்வித் தகைமையாளர்கள், (4) மருத்துவம், சுகாதாரம் சம்பந்தப்பட்டோர், (5) அரசாங்கப் பணியிலுள்ளோர், (6) தீவிர தொண்டூழியர்கள் என்பனவாகும். இந்த வட்டங்கள் குறிப்பிடும் ஆறுவகைச் சமூக மனிதர்கள்தான் ஒரு சமூக மையத்தின் குறைந்தபட்ச அடிநாதமாக இருக்கப்போகிறவர்கள் என்று ஒரு செயற்கை நுண்ணறிவு ஆய்வு சொல்கிறது.

மேலே சொல்லப்பட்ட ஆறுவகை சமூக மனிதர்கள் அனைவருமே நம் சமூக மையத்திற்கு ஏற்ற பங்களிப்பை செய்யக்கூடிய நிபுணர்களே யாகும். அவர்களில் ஒருவரோடு ஒருவர் சேர்ந்திருக்கும் நிபுணத்துவத்தின் அளவினை மேலே காணப்படும் வட்டங்களின் குறுக்குவெட்டு தெரிவிக்கிறது. வட்டங்கள் இணைந்ததால் வரும் குறுக்குவெட்டுப் பரப்பில் வரக்கூடியவர்கள் சமூக மையத்தின் வினைத்திறனை அதிகரிக்க வைக்கும் திறனாளர்களாக இருப்பார்கள்.

உதாரணத்திற்கு வியாபாரம் சம்பந்தப்பட்டோர் வட்டத்தை எடுத்துக் கொள்வோம். வியாபாரம் சம்பந்தப்பட்டோருள் கணிசமாக அளவினர் கல்வித் தகைமையாளராகவும், சட்ட நுணுக்கம் தெரிந்தவராயும் இருப்பதை வரைபடம் நமக்குச் சொல்கிறது. வியாபாரம் சம்பந்தப்பட்டோருள் தீவிர தொண்டூழியர்கள் மிகக் குறைவானவர்களாகவே காணப்படுகின்றனர் என்பதையும் வரைபடம் சுட்டிக் காட்டுகிறது. இந்தத் தீவிர தொண்டூழியர்கள் பெரும்பாலும் அரசியல் மற்றும் சட்ட விவாதங்களில் ஈடுபடுபவர்களாக இருப்பார்களேயன்றி நிதி சம்பந்தப்பட்டவர்களாக இருப்பது குறைவு.

> **சமூக மையம் உருவாகும் போது, அது ஒரு கட்டிடமாக மட்டும் இல்லாமல், தமிழருக்கான நிரந்தர கலாச்சார மையமாக இருக்க வேண்டும்.**

வியாபாரம் சம்பந்தப்பட்டோர் வட்டத்திற்கு நேர் எதிராக அரசாங்க பணியிலுள்ளோர் வட்டம் இருப்பதைக் கவனியுங்கள். அதாவது அரச பணியாளர்கள் வியாபாரம் சம்பந்தப்பட்ட நிலையில் இயங்குவது மிகக் குறைவு என்பதை வரைபடத்திலிருந்து தெட்டத்தெளிவாக அறிந்து கொள்ளலாம். அப்படி இருந்தாலும் அவர்களது தொகை மிக மிகக் குறைவு என்பதைக்கூட வட்டங்களின் குறுக்கு வெட்டினை வைத்து நாம் புரிந்து கொள்ள முடியும். மேலும் ஒன்றைக் கவனித்துப் பாருங்கள். அரச பணியாளர்கள் வியாபார நோக்குடன் வந்தாலும் அது ஏதோ ஒருவகையில் சட்டம் சம்பந்தப்பட்டோரின் கவனிப்போடுதான் நடக்கிறது அல்லது மருத்துவம், சுகாதாரம் சம்பந்தப்பட்டோராக அவர்கள் இருப்பார்கள். தீவிர தொண்டூழியர்களாகவும் அவர்கள் வந்து சேர்வார்கள் என்பதையும் வரைபடம் சொல்கிறது. ஆனால் இத்தகையோரின் தொகை மிகக் குறைவாக இருக்கிறது என்பதையும் வரைபடத்தின் வட்டங்களின் குறுக்கு வெட்டினை வைத்து நாம் புரிந்து கொள்ளலாம்.

மேலே எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த வரைபடத்தை அடிப்படையாக வைத்து தமிழ்ச் சமூகமையத்தின் நிர்வாகிகளைக் கூட நாம் அடையாளம் காண முயல முடியும். ஒரு சமூக மையத்தின் நிர்வாகிகள் ஒரே துறையினராக இல்லாமல் பலதுறை விற்பன்னர்களாக இருப்பின் அது சமூக மையத்திற்குப் பலம் சேர்க்கும். விஞ்ஞானபூர்வமாக இவ்வாறு அடையாளம் காணப்படும் நிர்வாகிகள், எப்போதுமே திறனாளர்களாகவும், வினைத்திறன் கொண்டவர்களாகவும் இருப்பார்கள் என்று கணிக்கப்பட முடியும்.

தமிழ்ச் சமூகமையம் தற்போது இன்னும் அதன் ஆரம்பக் கட்டத்திலேயே இருக்கிறது என்பதையும் தற்போது அது தனக்கான முன்தேவையாகக் காட்டப்படவேண்டிய ஆரம்ப நிதிவளத்தை சேகரித்துப் பக்குவப்படுத்தும் நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் நாம் அறிவோம். அதனைக் கவனத்தில் கொண்டு, அந்த நிதிவளத்தை பெறுவதற்கான கொடையாளிகளை அடையாளம் காணவும், சமூக மையத் திட்டத்தின் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களிற்கும் ஏற்ற திறனாளர்களை பட்டியலிடவும் மேலே சொல்லப்பட்ட வரைபடம் ஒரு பரிந்துரையாகக்கூடக்கொள்ளப்பட முடியும்

திறனாளர்களை அடையாளம் கண்டு அவர்களை சமூக மையத்தோடு இணைத்து அவர்கடாகச் செயல்பாடுகளைக் கொண்டு செல்வது சமூகத்தின் சிறப்பான மேன்மைக்கு என்றென்றும் நன்மை பயக்கும் என்பதுதான் இந்த கட்டுரை முடிவுரையாக நாம் சொல்லவிரும்பும் விடயமாகும்.



கனடா மூர்த்தி

AUDIO QR CODE

# தமிழ் மொழியின் நீடித்த இருப்பில் தமிழ்ச் சமூக மையத்தின் வகிபாகம்!



உலகில் இன்று உயிர் வாழும் மொழிகளில் மிகப் பழமையானது தமிழ் மொழி என்பது இன்று பொதுவாக உலகம் முழுவதிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை! அகத்தியம், தொல்காப்பியம் போன்ற யாப்பிலக்கணங் களை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே நம் தமிழ் மொழியில் வகுத்து வைத்திருக்கிறார்கள்! திருக்குறள் மூலம் ஆழமான வாழ்வியல் கருத்தியல்களை எக்காலத்திற்கும் எவருக்கும் பொருந்தும் வண் ணம் குறுகத்தரித்த இரண்டடிக் குறள்களாக உலகப்பொதுமறை யாக படைக்கும் அளவுக்கு இரண்டாயிரம் வருடங்கள் முன்பதாகவே தமிழ் மரபானது அறிவுபூர்வமானதாகவும் மொழியாழுமை யுடனும் திகழ்ந்திருக்கிறது என்பது நாம் ஒவ்வொருவரும் பெருமைப்பட வேண்டிய விடையம்!

ஆயிரம் வருடங்களுக்கு முன் கடாரம் வென்ற சோழன் கட்டிய தமிழ் சாம்ராய்யத்தின் எச்சங்கள் தென்கிழக்கு ஆசியா கடந்து பாலித்தீவு வரை இன்றும் பரந்து கிடக்கிறது. சிங்கப்பூரில் தமிழ் மொழியும் ஒரு தேசிய மொழியாக உள்ளது. மலேசியாவில் ஏராளமான தமிழர்கள் தாய்மொழி பேசி வாழ்கிறார்கள்! இன்றைய மியான்மர்( பர்மா) இந்தோனேசியா பகுதிகளிலும் தமிழர்களை சந்தித்திருக்கிறேன்.

இன்று உலகம் முழுவதும் தமிழ் மொழியை தாய் மொழியாக கொண்டவர்கள் பரந்து விரிந்து மிளிர்கிறார்கள்!

இரண்டு வருடங்களுக்கு முன்பாக இந்த நாட்டில் காலூ ன்றிய போது பார்த்து பிரமித்த விடையங்களில் ஒன்று நம் தமிழ் சமூகம் கலை கலாச்சாரம் பண்பாட்டு விடையங்களை மிகச் சிறப்பாக புலம் பெயர்ந்து வாழும் நம் தமிழ் சமூகம் பேணிவருவது. தமிழ் நிகழ்வுகளுக்கு பஞ்சமில்லை. ஆனால் அடுத்த தலைமுறைக்கு தமிழ் மொழியின் இருப்பையும் புலமையையும் ஒரு சமூகமாக நிலைபேறாக ஊடுகடத்துவதற்கு நிகழ்வுகள் மட்டும் போதுமா என்ற கேள்வி எனக்கு அடிக்கடி எழுவதுண்டு!

இரண்டாம் தலைமுறையில் ஒருபகுதி பிள்ளைகள் தமிழ்மொழியை சரளமாக பேசினாலும் இன்னும் ஒரு பெரும்பகுதி தாய் மொழியில் போதிய புலமையை காண்பதில் சவாலை எதிர்நோக்குகிறது. இந்த சவால் அடுத்தடுத்த தலைமுறைகளில் இன்னும் அதிக சவால்களை கொடுக்கும். கனடாவில் தமிழை தாய்மொழியாக கொண்ட சமூகத்தின் எண்ணிக்கை ஒரு மில்லியனை தாண்டிருக்கலாம்! எல்லாம் இருந்தும் ஏன் எங்கள் மொழியின் புலமையை பெறுவதில் சவால் ஏற்படுகிறது என்று தேடினால்

தமிழ் மொழிக்கான நிரந்த கட்டுமானங்கள் இன்னும் தயாராகவில்லையோ என்று எண்ணுகிறேன்! ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் தமிழ் சமூகத்தினை ஒன்றிணைக்கும் தமிழ்ச் சமூகமையங்கள் ஏன் இன்னும் தோன்றவில்லை என்ற தேடலில் தான் அண்மையில் ரொரண்டோ மாநகரில் அமைய இருக்கும் தமிழ்ச் சமூகமையம் பற்றி கேள்வியுற்று மகிழ்ந்தேன்.

நாங்கள் ஈழமண்ணில் வாழ்ந்த காலத்தில் ஒவ்வொரு ஊரிலும் வாசிகசாலைகள், கிராம அபிவிருத்தி சங்கம் போன்ற வடிவங்களில் இருந்த கிராமிய சமூக மையங்கள் அந்த அந்த சமூகத்தின் முன்னேற்றத்தில் முக்கிய வகிபாகத்தை கொண்டிருந்தன. கனடாவில் தமிழ்ச் சமூக மையமும் அவ்வாறான ஒரு வகிபாகத்தை ஆற்றவல்லதாக அமையும் என நம்புகிறேன். மூன்று நான்கு தலைமுறைகளை கொண்ட நம் தமிழ் சமூகத்தினை இணைக்கும் ஒரு உறுதியான சக்தியாக தமிழ்ச் சமூக மையம் திகழவேண்டும்!

சமூகத்திற்கான கட்டுமானங்கள் ஊர் கூடித் தேர் இழுப்பது போல ஒட்டுமொத்த சமூகத்தின் பங்களிப்புடன் உருவானால் தான் சமூகத்திற்கும் கட்டுமானங்களுக்கும் இடையில் ஆத்மார்த்தமான ஒரு பிணைப்பு இருக்கும். நினைவுகளை மீட்டிப் பாருங்கள்! சமூகமாக இணைந்து கரம்கோர்த்து செய்து முடித்த வேலைகள், கட்டுமானங்கள் இன்றும் எங்கள் ஆன்மாவோடு ஒன்றியிருக்கும். யாரோ பணம் கொடுத்து கட்டிக்கொடுத்த விடையங்களை மறந்திருப்போம். ஆக இந்த தமிழ்ச் சமூகமையமும் கனடா வாழ் தமிழர்களின் பங்களிப்போடு உருவாவது மிக அவசியம். அப்போதுதான் தலைமுறைகள் கடந்தும் தமிழ்ச் சமூக மையத்துடனான பிணைப்பை ஒவ்வொரு தமிழ்க்குடும்பமும் கொண்டிருக்கும். அதுவே ஒரு சமூக மையம் சமூகத்துக்கு ஆற்றவேண்டிய பணியையும் உறுதிசெய்வதோடு மிகப் பழமை வாய்ந்த ஒரு மொழியின் இருப்பை ஏனைய சமூகங்களுக் கும் எடுத்தியம்பும் முன்னுதார ணங்களையும் உருவாக்கும்!

தமிழ்ச் சமூகமையத்தின் உருவாக்கத்தில் கனேடிய தமிழர்கள் கரங்கோர்த்து பயணித்து இந்த முயற்சி வெற்றி பெற்று நம் தாய் மொழிக்கு நாம் பெருமை சேர்ப்பதோடு நம் எதிர்கால சந்ததிக்கும் மொழியின் புலமையை ஊடுகடத்தும் கடமையை செய்யவேண்டும் என்பது அவா.

தமிழ்ச் சமூகஅமையத்தின் உருவாக்கத்தில் முன்னின்று உழைக்கும் அத்தனை தமிழ் ஆர்வலர்களுக்கும் மனமார்ந்த நல்வாழ்த்துகள்! முயற்சி திருவினையாக்கும்!

“தமிழ்ச் சமூகஅமையத்தின் உருவாக்கத்தில் முன்னின்று உழைக்கும் அத்தனை தமிழ் ஆர்வலர்களுக்கும் மனமார்ந்த நல்வாழ்த்துகள்! முயற்சி திருவினையாக்கும்!”



தயந்தன் திருநாவுக்கரசு



# நமக்கென்று ஒரு பூமி

பயிருக்கு நிலமொன்று தேவை - பச்சை
படர்கின்ற இலைவாழ ஒளி கொஞ்சம் தேவை.
உயிருக்கு உடலொன்று தேவை - உள்ளம்
ஊடாடித் தாலாட்ட இணையொன்றும் தேவை.

தமிழென்ற இனமாக நாங்கள் - இங்கே
தனியாகத் தனியாக வாழ்ந்திங்கு வந்தோம்.
அமிழ்தெங்கள் பண்பாடு என்றோம். - அதை
அழியாமல் காப்பாற்றத் தடுமாறுகின்றோம்.

தாய்மண்ணின் தமிழென்ற பயிரை - குளிர்த்
தரணியில் கொணர்ந்திட்டோம். அது வாடலாமா?
தாய்நாட்டின் தனிவேரும் இங்கே - பனித்
தேசத்தில் இடமின்றி துயர் சூடலாமா?

கனடாவில் நாம் ஒன்றுகூட, தமிழ்ப்
பண்பாடு பல்வேறு கிளை கொண்டு வாழ
இனமாக ஒருபாடல் பாட, இடம்
இன்றிங்கே உருவாகும் எதிர்காலமாக.

தமிழென்ற சமூகத்தின் மையம் - தனை
உருவாக்கி எதிர்காலம் வளமாக்கல் தேவை.
தமிழென்ற இனமாக நாங்கள் - இனி
கதைபேசி உறவாட புதுமையம் தேவை.

பண்பாடு மறக்காமல் இளையோர் - அங்கே
பயிலவும் பாடவும் நாடவும் செய்வர்.
அன்போடு கலைவாழச் செய்வர். - அங்கே
இனிதாக மகிழ்வோடு இசைபாடி உய்வர்.

நிதிகொண்டு வளர்ந்திடச் செய்க. - தமிழ்
நிலமென்ற உணர்வோடு இதை ஓங்கச்செய்க.
உதிக்கின்ற சூரியன் போல - எங்கள்
உயிர்போன்ற தமிழ் என்றும் உயர்ந்தோங்கச் செய்க.

AUDIO QR CODE



வி. விமலாதித்தன்

# பெருங்கனவு!

கனாக் கண்டேன் தோழா! கனடா நாட்டின் நெஞ்சில்
தமிழர் ஒருமித்துத் திகழும் மையம் ஒன்று எழுந்ததைத்
அழகிய கட்டிடங்கள், அரங்க வசதிகள்,
கலை, கல்வி, கலாசாரத்தின் கோவிலாக விளங்குதே.

நூலகம் நிறைந்த அறிவின் நெடுந்தொலைவுகள்,
விளையாட்டு அரங்குகள், வீரத்தின் வெளிப்பாடுகள்
கலைநிகழ்ச்சி மண்டபம், கலையின் களஞ்சியங்கள்,
சமூக நிகழ்வுகளுக்குச் சிறந்த இடமாகும் மையம்.

சிறுவர், இளையோர், முதியோர் என அனைவருக்கும்
தமிழ் பெருமையும் வரலாறும் கற்பிக்கும் நிலையம்
மூத்தோரின் போராட்டம், உழைப்பின் வலியை, வழிகளை
எதிர்காலத் தலைமுறை கேட்டறியும் இடம்.

தமிழர்களாய் ஒன்றுகூடி, கூடி மகிழும்
சிறந்த இடமாகும் இந்த சமூக மையம்
நம் பாரம்பரியத்தின் பசுமையான பிரதிபலிப்பு,
புதிய தலைமுறைக்கு பெருமையாகப் பரிணமிக்கும்.

தோழா, நம் கனவை நனவாக்க நம் கரங்கள் ஒன்றுபடட்டும்
நிதி உதவியால் நம் சமூக மையம் நிஜமாகட்டும்
தமிழர் நம் திருவுளம் நிறைவேற்ற,
நாம் அனைவரும் சேர்ந்து செயல் படுவோம், முன்னேறுவோம்.

மின்னல்






## Every Donation Counts: Support a Cause That Matters

### Founding Family Donation

Donate **$10,000** now, quarterly, or monthly over two years. Founding Families will be recognized on the wall of the future auditorium with their "Family Name, Year of Arrival to Canada".

**Become a Founding Family of TCC!**

**Join the Family Giving campaign.**

Become one of 2,500 families to donate **$10,000** over the next two years to raise **$25,000,000**

AUDIO QR CODE

# Fundraising Plan




**Note:** Community must raise mandatory $15M to unlock Total Federal & Provincial Funding ($26.3M)




## WE NEED 2,500 FAMILIES TO COMMIT BY THE END OF THIS YEAR

**What is the commitment?**
A **$10,000 donation**, with up to a **$4,000 rebate**.

**Are there payment options?**
Yes, flexible payment plans are available:
- **25 monthly payments** of $400
- **Eight quarterly payments** of $1,250
- **Four semi-annual payments** of $2,500
- **Two annual payments** of $5,000

**It's a big commitment. How can the burden be reduced?**
You don't have to make this payment alone. Consider joining forces with your **spouse, parents, siblings, or cousins** to share the commitment and make it more manageable.

**Founding Families Tribute**
As a tribute, the names of donor families will be **permanently engraved** on the Community Centre wall.

# Project Timeline

| 2024 | 2025 | 2026 | 2027 |
|---|---|---|---|

**Feasibility & Design**
Feb 2024–Jun 2024
(5 months)
Take drawings from Pre-Design to Schematics ready.

**Finalize Design & Site Plan**
Aug 2024–Dec 2024
(3 months)
Engage all consultants and prepare drawings for submission to City ZBA, SPA.

**Tendering Process**
Oct 2025–Mar 2026
(6 months)
Draft, release, and secure contractor through RFP process.

**Engagement**
Mar 2024–Jun 2024
(4 months)
Re-engage 150 organizations and collect feedback on program spaces. Engage broader Tamil community.

**Planning Approvals**
Jan 2025– May 2026
(17 months)
City reviews and approves ZBA/SPA.

**Construction**
Jun 2026–Dec 2027
(20 months)
Construction begins and is completed.

# Ways to Donate

- 📢 **Donate today and help build a lasting legacy.**
- 📩 Reach out to us at donate@tamilcentre.ca for more information.
- 💳 Tax receipts will be provided.
- 📲 Scan and Pay to make your contribution easily.

# Inspired by Tamil Culture

## Our Logo

There are five components to the logo. The Tamil Community Centre is a celebration of community, culture and care inspired by our rich traditions and history, drawing from the past and striving for the future – the new logo aims to capture this.

## Sun

In Tamil tradition, the sun symbolizes an enduring legacy and embodies the cultural vitality of the community. The position of the sun determines the date of the Tamil New Year and the festival of Thai Pongal is dedicated to the sun. Our logo is a radiating circle, like the sun.

## Community

We draw our meaning and our energy from our connection to our community. It is also about our diaspora in the diverse tapestry that is Canada. Our logo is inspired by a circle of hands, denoting strength in unity.

## Akaram / அகரம்

It is the first letter of our alphabet and phonetically the first sound of our language. The swirl (சுழி) is the first shape we learn to draw as we learn to write Tamil, a shape that begins almost every vowel letter. The swirlis the first element of our logo.

## Kolam

This is a geometric design traditionally drawn with rice powder, meant to feed ants and small birds to signify living in harmony with nature. It is also meant to welcome people and prosperity into a dwelling. The logo symbolizes a kolam welcoming our own community and all Canadians to the centre.

## Five

The number five has recurring significance in Tamil culture referring to the five elements (Boothangal), the five landscapes (Tinaikal), and the five great works of Tamil literature (Kaappiyangal). The five swirls of the logo remind us of these cultural treasures.

# தமிழ்ச் சமூக மையம் - தமிழ் மரபுத் திங்கள்

தமிழ்ச் சமூகமையமானது 2025 ஆம் ஆண்டிற்கான தமிழ் மரபுத் திங்களை முன்னிட்டு மாணவர்களுக்கான கட்டுரை மற்றும் காணொளி போட்டியினை ஏற்பாடு செய்திருந்தது. கனேடிய தமிழ் மண்ணில் எமது பாரம்பரியங்களைப் பாதுகாப்பதற்கும் எமது தமிழ் சமூகத்தின் பெருமைகளை வெளிப்படுத்துவதற்கும் தமிழ்ச் சமூகமையத்தின் அவசியம் என்ற கருப்பொருளில், இந்த போட்டிகள் முன்னெடுக்கப்பட்டன. ரொரன்ரோ பெரும் பாகத்தில் உள்ள முக்கிய கல்விச் சபைகள் இதற்கு பங்களிப்பு வழங்கியிருந்தன. பல மாணவர்கள் இதில் ஆர்வத்துடன் பங்களித்திருந்தனர். மாணவர்களின் படைப்புகள் நடுவர்கள் குழுவால் பரிசீலிக்கப்பட்டு வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இந்த வருடம் ஜனவரி 30ம் திகதி தமிழ்ச் சமூக மையத்தின் தமிழ் மரபு திங்கள் நிகழ்வில் இவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன. இந்த பரிசுகளுக்கான இணை அனுசரணையினை Re/Max Community Realty Inc வழங்கியிருந்தது.

## 10-13 வயதுப்பிரிவு - கட்டுரைப் போட்டி




முதலாம் இடம்
**ஆருஷன் தயானந்தன்**




இரண்டாம் இடம்
**ஸ்டெபானி அலெக்சாண்ட்ரா பெர்சனுட்**




மூன்றாம் இடம்
**அகவி விஜிகரன்**

## 14-17 வயதுப்பிரிவு - கட்டுரைப் போட்டி




முதலாம் இடம்
**நிந்துஜா ஸ்ரீரங்கன்**




இரண்டாம் இடம்
**நவ்யா குகேசன்**




மூன்றாம் இடம்
**அஜய் உமைபாகன்**

## காணொளிப் போட்டி




முதலாம் இடம்
**அன்விதா அகலிஜன்** மற்றும்
**அனுஜன் அகலிஜன்**




இரண்டாம் இடம்
**அபிஷ்டன் சிவானந்தன்**




மூன்றாம் இடம்
**ஆராதனி ராஜகுமார்**

**புகைப்படம் - நவஜீவன் அனந்தராஜ்**

SPONSORED BY:
RE/MAX
COMMUNITY
Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE

**Vanakkam,**

It is a great pleasure to reconnect with you through E-Kuruvi after a long interval.

About 14 years ago, E-Kuruvi was launched as part of the promotional efforts for the fundraising walkathon organized by the Canadian Tamil Chamber of Commerce.

Over the years, this publication has played a vital role in raising awareness among the Tamil community by addressing significant and vital social issues. It has created ripples that contributed to social transformation. Through this journalistic journey, Puthiya Velicham - a new ray of light and hope of knowledge and action began to spread in our homeland.

However, due to the unprecedented challenges brought on by the COVID-19 pandemic, we were forced to make the difficult decision to halt our publication.

Now, not just the Canadian Tamil community, but Tamil people across the world stand at a crucial juncture.

As people who have migrated from our homeland and Tamil Nadu, we face the risk of losing our traditions in foreign lands. At such a critical time, it is essential for us to remain alive as a Tamil community by passing on our heritage and customs to the next generation.

With this backdrop, E-Kuruvi spreads its wings once again to create awareness among the people about the Tamil Community Centre project, which is being developed in Canada with the support of all three levels of government. This revival is driven by the historical necessity of emphasizing the importance of greater public participation in this initiative.

Through my personal journey of meeting a hundred individuals over a hundred days to seek support and financial contributions for the Tamil Community Centre, I have realized the immense enthusiasm and warm reception for this project. This experience has reinforced the urgent need to take this initiative to thousands more within the Tamil community.

Even in today's digital age, dominated by social media, we firmly believe in the power of print media to create a profound and lasting impact.

Reaching out to people about the Tamil Community Centre project is not just about seeking their contributions; it is also about addressing their questions and clarifying any doubts they may have. This, we believe, is the need of the hour.

With these objectives in mind, this magazine has once again reached your hands today. E-Kuruvi has already played a role in driving social change, and we take immense pride in continuing its publication to fulfill this purpose.

Together, we must unite and build the Tamil Community Centre. This is a golden opportunity that we cannot afford to miss.

We sincerely urge every individual who cares about Tamil and its future to contribute in any way possible and help make this project a resounding success!

With love,
**Navajeevan Anantharaj**
ekuruvi and Puthiya Velicham
Tel: 416-272-8543
Email: ekuruvi@gmail.com



**The Tamil Community Centre: A Global Initiative for Unity, Culture, and Empowerment**
- Rukshan Para

**The Tamil Community Centre, a thank you gift for our parents**
- Keerthana Rang

**A Community Center is a Vital Third Place**
- Quentus Thuraisingam

**Building tomorrow's Tamil legacy**
- Keerthana Rang

**Research Study: Community Centres in the Greater Toronto Area (GTA)**
- Sharan Sriskantharajah

**Why Do We Need a Tamil Community Centre in Toronto? Why Now, of All Times?**
- Tharani Ketheeswaran

**"Preserving Tamil Heritage: The Urgent Need for a Community Centre"**
- Sharmmila Rajkumar

**தமிழ்ச் சமூக மையத்தினை கட்டுவதற்கு மக்கள் ஏன் பணம் கொடுக்க வேண்டும்?**
- ரமணன் சந்திரசேகரமூர்த்தி

**தமிழ்ச் சமூக மையம் கனேடியத் தமிழர்களின் பெருமையாக அமையும்**
- வேல்

**புலம்பெயரிகள் யுகத்தில் ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவது**
- நிலாந்தன்

**தமிழ்ச் சமூக மையம் என்பது காலத்தின் தேவை**
- குயின்ரஸ் துரைசிங்கம்

**சனசமூக நிலையத்திலிருந்து, சமூக நிலையம் நோக்கி**
- ரதன்

**ஒரு வட்டமும் தமிழ்ச் சமூக மையமும்**
- கனடா மூர்த்தி

**தமிழ் மொழியின் நீடித்த இருப்பில் தமிழ்ச் சமூக மையத்தின் வகிபாகம்!**
- தயந்தன் திருநாவுக்கரசு

Editorial board:
**Navajeevan Anantharaj**
**Gobinath Ponnuthurai**
**Soorya Balendra**
**Ramanan Santhirasegaramoorthy**

Cover design:
**Sujeevan Yogalingam**

Page design:
**Vijayarupan Pushparasa**

# The Tamil Community Centre: A Global Initiative for Unity, Culture, and Empowerment

AUDIO QR CODE

The establishment of the Tamil Community Centre (TCC) in Canada represents a significant milestone for the Tamil diaspora. While many might initially view it as a project that only affects Tamils in Ontario or those who are directly connected to the region, the importance and impact of such a centre extend far beyond provincial borders. The Tamil Community Centre is not just a local initiative but a global endeavor that should be embraced and supported by Tamils across Canada and, indeed, Tamils all over the world. In this essay, we will explore why the Tamil Community Centre is not only a vital asset for Tamils in Canada but also how it can benefit the broader community by acting as a hub for cultural exchange, collaboration, and social empowerment.



> **The Tamil Community Centre is not just a local initiative but a global endeavor that should be embraced and supported by Tamils across Canada and, indeed, Tamils all over the world.**

### The Importance of the Tamil Community Centre

The Tamil diaspora in Canada is an integral part of the nation's multicultural fabric, contributing to various social, economic, and cultural spheres. Canada is home to a significant Tamil population, with many settling in major urban centres such as Toronto, Montreal, Vancouver, and Ottawa. However, the establishment of a Tamil Community Centre in Canada is more than just a place to gather; it is a vital platform to preserve, promote, and share Tamil culture, heritage, and language.

### Preserving Tamil Culture and Heritage

One of the primary benefits of the Tamil Community Centre is its potential to preserve and promote Tamil culture. Tamils, both in Canada and abroad, share a rich history that spans over thousands of years. This heritage is not merely a collection of historical facts; it is a way of life that informs the worldview, values, and customs of the Tamil people. In a multicultural society such as Canada, it is crucial to have spaces where individuals can connect with their cultural roots and pass this legacy on to future generations.

The Tamil Community Centre provides a physical space where cultural events, language classes, festivals, and workshops can be organized. It can become a hub for celebrating traditional Tamil festivals such as Pongal, Deepavali, and Tamil New Year. It can also provide a venue for the next generation of Tamils to learn their language, connect with their history, and develop a sense of identity. In this way, the Tamil Community Centre is not only a place for Tamils to come together but also a means to ensure that Tamil culture and language continue to thrive in Canada for years to come.

### Supporting the Tamil Community's Social Needs

Beyond cultural preservation, the Tamil Community Centre also plays a vital role in meeting the social needs of the Tamil diaspora. Many immigrants, particularly those who arrived in Canada as refugees or under humanitarian grounds, face significant challenges when adapting to life in a new country. These challenges range from language barriers to difficulties in accessing healthcare, employment, and social services. For many Tamils, navigating these systems can be a daunting task, and this is where the Tamil Community Centre can serve as a crucial resource.

By providing social services such as language classes, job training programs, legal assistance, and mental health support, the community centre can help Tamils integrate more smoothly into Canadian society. Furthermore, the centre can serve as a safe space for individuals to share their experiences, seek advice, and receive emotional support. The Tamil diaspora has faced its fair share of trauma and hardship, and the community centre can serve as a place where individuals can heal and find solidarity with others who share similar experiences.

### Empowering the Next Generation

For the next generation of Tamils born and raised in Canada, the Tamil Community Centre offers a unique opportunity to stay connected to their cultural heritage while also integrating into the broader Canadian society. In a world where cultural assimilation often leads to the dilution of ethnic identities, the Tamil Community Centre can act as a bridge, helping younger Tamils retain their language and traditions while simultaneously embracing their Canadian identity.

Through mentorship programs, youth engagement initiatives, and leadership training, the Tamil Community Centre can empower young Tamils to take on active roles in their communities. It can help nurture future leaders who are not only proud of their

**By providing social services such as language classes, job training programs, legal assistance, and mental health support, the community centre can help Tamils integrate more smoothly into Canadian society.**

Tamil roots but are also equipped to contribute meaningfully to Canadian society at large.

### The Centre as a Hub for Community Collaboration and Integration

While the Tamil Community Centre is primarily focused on supporting and empowering Tamils, its benefits extend beyond this singular group. In fact, one of the most compelling reasons to support the centre is its potential to act as a hub for collaboration, dialogue, and interaction between different communities in Canada and abroad. A well-established community centre can create opportunities for intercultural exchange, mutual understanding, and social cohesion, thus fostering a more inclusive and harmonious society.

### Building Bridges Between Communities

In a diverse and multicultural country like Canada, there is often a risk of communities becoming isolated or insular, particularly if they are centered around ethnic or cultural identities. The Tamil Community Centre, however, has the potential to break down these barriers by hosting events that bring together people from different backgrounds. Whether it is through multicultural festivals, interfaith dialogues, or collaborative social initiatives, the centre can create opportunities for people from different cultural communities to come together and learn from one another.

For example, the Tamil community can collaborate with other ethnic groups to celebrate shared values such as family, respect, and community. The centre can host events where Tamils share their culture and history with others, fostering greater appreciation and understanding. Similarly, the Tamil Community Centre can invite other cultural organizations to use the space for their own events, creating a melting pot of ideas and cultures.

By acting as a neutral ground for interaction and collaboration, the Tamil Community Centre can promote intercultural harmony and create stronger bonds between Canada's diverse communities. This is not only beneficial for Tamils but for all Canadians, as it nurtures a more inclusive, tolerant, and empathetic society.

### Promoting Social Integration

For the Tamil diaspora, social integration is an ongoing challenge. While the Tamil community has made significant strides in becoming an established and successful part of Canadian society, many individuals still face barriers to full integration. These barriers might include language difficulties, unfamiliarity with Canadian systems, or even discrimination. The Tamil Community Centre can play a pivotal role in easing this process of integration by providing resources, mentorship, and connections to mainstream Canadian society.

Moreover, the centre can serve as a place where Tamils can learn about Canadian culture, history, and social norms. This understanding can help bridge the gap between the Tamil community and the broader Canadian public, reducing misconceptions, prejudice, and discrimination. By promoting greater social integration, the Tamil Community Centre can help ensure that Tamils are not only accepted but are seen as an essential part of the Canadian mosaic.

### A Model for Other Communities

The success of the Tamil Community Centre in fostering intercultural dialogue and integration could serve as a model for other ethnic communities. Canada's multicultural landscape is vast, and many communities face similar challenges when it comes to maintaining their cultural identity while integrating into the larger society. The Tamil Community Centre can be an example of how cultural and ethnic communities can work together, not just within their own groups, but also in collaboration with other communities to promote mutual respect and understanding.

The Global Impact of the Tamil Community Centre

While the primary focus of the Tamil Community Centre may be the Tamil diaspora in Canada, its influence could extend globally. Canada's Tamil community is part of a larger global Tamil diaspora that stretches across countries such as Sri Lanka, India, the UK, the US, Australia, and beyond. The Tamil Community Centre in Canada has the potential to act as a link between Tamils worldwide, creating opportunities for cross-border collaborations, exchanges, and solidarity.

By involving Tamils from around the world, the centre can build a global network of Tamil communities, which could be invaluable for addressing issues of shared concern, such as human rights, political advocacy, and social justice. Furthermore, the centre can become a platform for international Tamil artists, scholars, and activists to showcase their work, share ideas, and engage in collaborative projects.

This global perspective can also create opportunities for fundraising, partnerships, and joint initiatives that benefit Tamils both in Canada and in the broader diaspora. A strong and united global Tamil community, centered around the Tamil Community Centre, could be a powerful force for positive change.

### Conclusion

The Tamil Community Centre is much more than just a local project. It is an initiative that holds the potential to unite Tamils across Canada and beyond, creating a space where cultural preservation, community support, and social integration can thrive. Beyond its primary role in supporting Tamils, the centre also has the potential to act as a hub for collaboration between different cultural communities, fostering social cohesion and intercultural understanding.

By coming together to support the Tamil Community Centre, Tamils in Canada and around the world can help ensure that their heritage is preserved, their social needs are met, and their voices are heard on a global stage. In doing so, they can also contribute to a more inclusive, compassionate, and integrated society for all.



**Rukshan Para**

# The Tamil Community Centre, a thank you gift for our parents

AUDIO QR CODE



I was recently asked if I could live or work or raise a family in any city in the world, where would it be? I didn't have to think twice. My answer is Toronto. I love Toronto. It is the best city in the world. We have our challenges, but we are a city where we celebrate our differences while rooting ourselves in being Canadian. It's why all our parents chose to rebuild their lives here.

As I grow older, I have extreme gratitude to all our parents for leaving their homes during a civil war to come here to Canada so us, their children, who were not even born yet could have better lives. I can't imagine doing that. Back home some of them were caught in the civil war, lost their loved ones, watched their homes be destroyed, and separated from their families. And when they got here, they faced hardships financially and emotionally as they set up their new lives while trying to stay connected to back home and their families in other countries. As hard as it was, they left because they truly believed where they were going was better than what they were leaving behind. I can't think of a better thank you gift for our parents than building a Tamil Community Centre (TCC). There are two reasons why I believe this.

> **The TCC is an opportunity to make sure our children and grandchildren know our histories, heritage, culture and language.**
>
> **This is a once in a lifetime opportunity for our community. This is our legacy project for future generations.**

First, we are setting them up for success as they get older. Within the decade, the first group of Tamils who came to Canada are now seniors and older than 65 years old. For them to live a happy and healthy life, they need to be surrounded by their friends, their culture, and their language. The TCC will give them that space. Just imagine our parents picking up their weekly Tamil newspaper there, checking out Tamil books at the library, gossiping about the latest episode of their favourite drama, or playing cricket in the outdoor field. It warms my heart to think of my parents with yours at the TCC walking the second floor track in the gymnasium while they watch their grandkids play in the gym below.

Second, we are making sure their stories of coming to Canada, our heritage, culture and language are preserved and shared with our children and grandchildren. I have a daughter and she's going to be four this year. She's half Tamil and half Dutch. My only regret in life is not having learned Tamil so I can teach her. I worry she's not going to know anything about being Tamil or the journey my parents went through so she and I can have the life that we do. And that makes me worry about the future of Tamil in Canada. Our brothers and sisters did not fight for our freedom back home so we can lose it in another country. The TCC is an opportunity to make sure our children and grandchildren know our histories, heritage, culture and language.

For both our parents and children, the TCC will help transform our histories and traditions from one generation to the next. It will also serve as a hub for all organizations in our community in the GTA. This will mean we can streamline programs and services for our parents and children to better serve them. It also means across organizations we can streamline our work towards supporting back home bringing unity.

> **I can't think of a better thank you gift for our parents than building a Tamil Community Centre (TCC).**

It's been an honour to be part of the TCC from the very beginning for the last five years to try and get this community centre built. Through our efforts, all three levels of government have endorsed this project and provided support through millions of dollars in funding and provided land worth millions of dollars—this is unheard of for any community in Canada. For our part, we need to raise $15M by spring 2026 and then $25M by fall 2027, we need to get shovels in the ground by next fall, and we need to finish building by summer 2027.

